பெண்மணிகளுக்கும் சிறுவர் சிறுமியருக்கும் ஏற்ற இறக்குமதி செய்யப்பட்ட நவீன புடவை தினுசுகளுக்கும் றெடிமேட் ஆடைகளுக்கும் புகழ் பெற்றவர்கள்
இளவரசி
S12, நவீன சந்தை, சுன்னுகம்.

Registered as a Newspaper

# சஞ்சீவி

அறிவு-ஆக்கம்-அபிவிருத்தி

விலை ரூ 2/-

குறுகிய காலத்தில் மக்களின் நன்மதிப்பையும் ஆதரவையும் பெற்ற ஒரே ஜவுளி நிறுவனம்
இளவரசி
S12, நவீன சந்தை, சுன்னுகம்.

மலே:- 2 யாழ்ப்பாணம் பிரபவ ஆனி ஸ்ரீ 27 உ சனிக்கிழமை ஹிஜ்ரி 1407 ஜுல்ஹஜ் பிறை 14 (11-07 1987) SANJEAVY - REGENERATIVE TAMIL WEEKLY சிகரம்:-24

# காரைநகருக்குள் வருவதற்கு கடற்படை-இராணுவம் முயற்சி

## கடுஞ் சமர் புரிந்து விடுதலைப் புலிகள் விரட்டினர்

— சஞ்சீவி காரைநகர் செய்தியாளர்: ரி. தயாபரன் —

காரைநகர், ஜூலை 11

காரைநகர் கடற்படை முகாமில் இருந்து இராணுவத்தினரும் கடற்படையினரும் வெளியேறி காரைநகர் களபூமிக்கு வருவதற்கு எடுத்த முயற்சி விடுதலைப் புலிகளினால் முறியடிக்கப்பட்டது.

நேற்றுக் காலை 9.30 மணிமுதல் நண்பகல் வரை விடுதலைப் புலிகள் இராணுவத்தினரையும் கடற்படையினரையும் எதிர்த்து கடும் சமர் புரிந்தனர்

விடுதலைப் புலிகளின் 'சென்றி' நிலைவரைமுன்னேறிய படையினர் புலிகளின் கடும் தாக்குதலை அடுத்து முகாமுக்குத் திரும்பினர்.

இதன்பின் படையினர் முகாமுக்குள் இருந்தவாறு காரைநகர்ப் பகுதியை நோக்கி கடும் ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

ஹெலிக்கொப்டரும் சீ- பிளேனும் தாக்குதலின்போது வானத்தில் வட்டமிட்டன.

தீவுப் பகுதிகளைக்

(8ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

11-07-1987
சனிக்கிழமை
சுபநேரம்:-
2.59 முதல் 4.29 வரை
ராகுகாலம்:-
8 59முதல் 10.29வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

## போதையினால் தீயில் கருகினர்

வட்டுக்கோட்டை, ஜூலை 11

மதுபோதையில் இருந்த இல்லத் தலைவன் ஒருவர் வீடு தீக்கிரையானபோது அதில் அகப்பட்டு துடிதுடித்து எரிந்து மரணமானுர்.

வட்டுக்கோட்டை கிழக்கு தாவளையைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு தீயில் எரிந்து பலியானவராவார்.

மதுபோதையில் வீடு எரிவதை உணர்ந்து கொள்ளாத நிலையில் தீயில் அகப்பட்டுக் கொண்ட இவரை அயலவர்கள் முயற்சி எடுத்தும் காப்பாற்ற முடியவில்லை. (உ-161)

## பூரி மீண்டும் நேற்று யாழ் வந்து சேர்ந்தார்

இந்தியத் தூதரக முதலாவது செயலாளர் திரு எச். எஸ். பூரி நேற்று இரண்டாவது தடவையாக யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார்.

கொழும்பில் இருந்து விமானம் மூலம் பலாலிக்கு வந்த அவர் பின்னர் ஹெலிக்கொப்டர் மூலம் காங்கேசன்துறைக்கு வந்து அங்கிருந்து நேற்றுப் பகல் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார்.

இதேவேளை ''ஐலண்ட் பிரைற்'' கப்பல் இன்று துறைமுகத்துக்குக் கொண்டு வரப்பட்டதும் அதில் இருந்து இறக்கப்படும் உணவுப் பொருள்களை திரு. பூரி மேற்பார்வையிடுவார். (உ-10)

## வடக்கு வாகனங்களுக்கு இப்படி ஒரு வரி!

அச்சுவேலி, ஜூலை 11

அனுராதபுரம் பொலீஸ் நிலையத்தின் திருத்த வேலைகளுக்கு அவ்வழியால் செல்லும் வடபகுதி வாகனங்களின் சொந்தக்காரர்களிடம் இருந்து 200 ரூபா வீதம் பணம் வசூலிக்கப்படுகின்றது என கூறப்படுகின்றது.

அந்தப் பகுதியைத் தாண்டிச் செல்லும் வடபகுதி லொறிகள், மினிபஸ், பஸ், கார் சொந்தக்காரர்களிடம் இருந்து இந்தப் பணம் கட்டாயப்படுத்தி வரிபோன்று வசூலிக்கப்படுவதாகக் கூறப்படுகின்றது.

பணம் கொடுக்க மறுக்கும் வாகனச் சொந்தக்காரர்கள் பல்வேறு நெருக்கடிக்கு உள்ளாக்கப்படுவதாகவும் கூறப்படுகின்றது. (உ-11)

## சக்திமிக்க விமானங்களை வாங்க ஸ்ரீலங்கா முடிவு

கொழும்பு, ஜூலை 11

தற்போது பயன்படுத்தப்பட்டு வரும் இத்தாலியத் தயாரிப்பான சியாமார்செட்டி விமானங்களிலும் பார்க்க சக்தி வாய்ந்த விமானங்களை வாங்க ஸ்ரீலங்கா அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

தனது விமானப்படையைப் பலப்படுத்தும் நடவடிக்கையாகவே இந்த விமானங்களை வாங்க ஸ்ரீலங்கா அரசு முடிவு செய்திருக்கிறது.

பாதுகாப்பு வட்டாரங்களை ஆதாரங்காட்டி 'த ஐலண்ட்' கொழும்பு ஆங்கில நாளிதழ் நேற்று இப்படி செய்தி வெளியிட்டது.

இத்தாலி சியா-மார்செட்டி விமானங்களில் ரொக்கட்டுக்களை ஏவ முடியும்; குண்டுகளைப் போட முடியும். ஆனால் இவ் விமானங்களில் 7.62 மி. மீ. இயந்திரத் துப்பாக்கிகளையே பொருத்தக் கூடியதாக உள்ளது.

புதிதாக வாங்கப்படும் விமானங்கள் பெரும்பாலும் பயிற்சிக்காகப் பயன்படுத்தப்படும். ஆனால் தரைத் தாக்குதல்களை மேற்கொள்ளக்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ★ பொலிகண்டி ★ யாக்கரை ★ வல்வை

# வடமராட்சியில்பல இடங்களில் நேற்றும் தொடர்ச்சியாக மோதல்

வடமராட்சி, ஜூலை 11

பொலிகண்டி, யாக்கரை, வல்வெட்டித்துறைப் பகுதிகளிலும் நேற்று மோதல்கள் நிகழ்ந்தன.

நேற்று நண்பகல் ஒரு மணியளவில் பொலிகண்டிமுகாமில் ஹெலிக்கொப்டர்கள் மூலம் சிப்பாய்கள் இறக்கப்பட்டபோது தமிழீழ விடுதலைப்புலிகள் ஹெலிகளை நோக்கி பெரும் தாக்குதல் நடத்தினர் இதனையடுத்து அப்பகுதியில் மோதல்கள் இடம்பெற்றன.

ஒரு ஹெலிக்கொப்டர் வேவு பார்ப்பதில் ஈடுபட்டிருக்க, இன்னெரு ஹெலிக்கொப்டர் போராளிகள் மீது தொடர்ந்து தாக்குதல் நிகழ்த்தியது.

சுமார் ஒரு மணித்தியாலம் வரை புலிகள் எதிர்த் தாக்குதலை நடத்தினர்.

இம்மோதலில் இராணுவத் தரப்பில் ஐந்து சிப்பாய்கள் உயிரிழந்தனர் என்றும்—

புலிகள் தரப்பில் கிருபா (20 வயது) என்ற போராளி உயிரிழந்தார் என்றும் அறிவிக்கப்படுகிறது.

வல்வெட்டித்துறை, யாக்சரை முகாம்களில் இருந்தும் படையினர் வெளியேற எடுத்த முயற்சி புலிகளினால் முறியடிக்கப்பட்டது.

இதேவேளை நேற்று வல்வெட்டித்துறை, முள்ளி போன்ற இராணுவ முகாம்களில் இருந்து மக்கள் குடியிருப்புக்களான நெல்லியடி, வேவிற்பிள்ளையார் கோவில் ஆகிய பகுதிகளை நோக்கி பலத்த ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. (உ-எ-160)

### இன்றைய சஞ்சீவியில் ....

★ மறக்கப்பட்ட மனிதர்கள்.
★ யுத்தம் எந்தநேரமும் மூளலாம்.
★ இந்தியா விரும்பும் புதிய யோசனை என்னவோ? (உள்ளும் புறமும்)
★ பஞ்சாப் படுகொலைகள் (உலக உலா)
★ வெங்கட்ராமனின் வெற்றி வாய்ப்பு.
★ காயம் ஏற்பட்டால்......
★ சதாசிவம் கொலைவழக்கு.
★ விம்பிள்டன் டென்னிஸ் போட்டி.
★ சொற்சிலம்பம்

இந்தியா செல்ல முயன்றவர்

## படகு கவிழ்ந்து நடுக்கடலில் பலி!

வேலணை, ஜூலை 11

மன்னாரிலிருந்து இந்தியாவுக்கு ஐந்து பேருடன்சென்ற படகு ஒன்று நடுக்கடலிலே வேகமாக வீசிய காற்றினால் கவிழ்ந்தது.

அப்படகில் சென்ற ஒருவர் கடலில் மூழ்கி மரணமானார்.

இந்தப் படகு கடந்த ஞாயிற்றுக்கிழமை மன்னார்கரையில் இருந்து புறப்பட்டதாகக் கூறப்படுகிறது.

[illegible] என்றழைக்கப்படும் மொஹிதீன் பிச்சை-பாவா முகைதீன் (வயது 36) என்பவரே நீரில் மூழ்கி மரணமானுர்.

இப்படகில் பயணம் செய்த மிகுதி நால்வரும் கவிழ்ந்த படகை நிமிர்த்தி மன்னார் கரை வந்து சேர்ந்தார்கள்.

இறந்தவரின் சடலம் நேற்று அல்லைப்பிட்டி மண்கும்பான் கடற்கரையில் [illegible]

படகு கவிழ்ந்ததைக் [illegible] பார்க்க)

இந்திய நிவாரணம்

## இன்னும் 4 கப்பல்கள் மட்டுமே வர அனுமதி

### அமைச்சரவை முடிவு

கொழும்பு, ஜூலை 11

உடன்பாடு காணப்பட்டபடி இன்னும் நான்கு கப்பல்களில் வரும் இந்திய நிவாரண உதவிகளை மட்டுமே ஸ்ரீலங்கா அரசு ஏற்றுக் கொள்ளும்.

அதற்கு மேல் இந்தியாவிடமிருந்து நிவாரண உதவிகளை ஸ்ரீலங்கா அரசு ஏற்றுக் கொள்ளாது.

இது சம்பந்தமான தீர்மானம் ஒன்று அரசுத் தலைமைப்பீடத்தினால் எடுக்கப்பட்டுள்ளது.

புதன்கிழமை நீண்ட நேரம் நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் கப்பல் விவகாரம் பரிசீலனை செய்யப்பட்டது

அதன் பின்னரே புதிதாக நிவாரண உதவிகளை அனுப்புவதற்கு இந்தியாவுக்குஅனுமதி வழங்குவதில்லை என்ற முடிவை அரசுத் தலைமைப்பீடம் எடுத்திருப்பதாக கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-எ)

## ஆதீன தாக்குதல் குறித்து பூரி கவலை!

யாழ்ப்பாணம், ஜூலை 11

ஹெலி தாக்குதலினுல் நல்லை ஆதீனம் சேதமடைந்தது குறித்து எச். எஸ். பூரி கவலை தெரிவித்தார்.

நேற்று நல்லை ஆதீனத்துக்கு விஜயம் செய்த திரு. பூரி, ஆதீன முதல்வரிடம் தமது கவலையைத் தெரிவித்தார்.

ஹெலிக்கொப்டர் தாக்குதலினுல் சேதமடைந்த ஆதீனத்தைப் பார்வையிட்ட அவர், இலங்கையில் உள்ள ஒரே ஒரு இந்து ஆதீனம் தாக்கப்பட்டதைப் பார்த்து அதிர்ச்சி அடைந்தார். (உ-10)

### கருத்துக் கலசம்

## பசுவும் பாலும்

பால் சத்துள்ள உணவுகளில் ஒன்று. அது உடலுக்கு உறுதி தருவது மிகவும் சுவையானது பாலெல்லாம் ஆவின் பாலோ எனப் பாடப் பட்டது.

பால் சிறந்த சத்துணவு மட்டுமன்றி வளத்தின், செழிப்பின் சின்னமாகவும் கருதப்படுவது. மங்களகரமான காரியங்கள் எல்லாவற்றிலும் அதற்குத் தவருத சிறப்பிடம் உண்டு.

''பாலும் தேனும் பாயும் நாடு'' என்று செல்வச் செழிப்புள்ள நாடுகளை இலக்கியங்களில் குறிப்பிடுவது உண்டு. செல்வம், சீர், சிறப்பு, வளம் என்பவற்றைக் குறிக்கும் ஒரு பொருளாகவும் பால் விளங்குகிறது.

பால் எனும்போது பொதுவாக ஆவின் பாலையே கருதுகிறோம். மிக முந்திய காலத்தில் பசுவின் பால் பண வசதி உடையவர்களின் உணவாகக் கருதப்பட்டது உண்டு.

ஆனல் இப்போது அந்த நிலை இல்லை. வீட்டுக்கு ஒரு பசுவேனும் வளர்க்கும் வழக்கம் தமிழர் வாழ்க்கை முறைகளில் ஒன்றுக இருந்தது. இந்து சமயத்தில் கோவுக்குக் கொடுக்கப்படும் தனி மதிப்பும் மரியாதையும் வேறு. தானங்களில் கோ தானமும் சிறந்த தானமாகக் கருதப்படுகிறது.

வானம் பார்த்த பூமியாகிய யாழ்ப்பாணக் குடாநாட்டில் பசு வளர்ப்பு என்பது யானையைக்கட்டித் தீனி போடுவது போன்றதே. புற்றரைகள் என்று பெயர் சொல்லி அழைக்க எதுவும் இல்லை. வருடத்தில் மூன்று மாதங்களில் மட்டும் பெய்யும் மழைக்கு முளைக்கும் புல். குழை தழை எனப்படும் பச்சைத் தீன். இவற்றை விட வைக்கோல் தான் எமது வீடுகளில் உள்ள பசுக்களுக்கு உணவு. இப்போது ''மாஷ்'' எனப்படும் அதிக விலை கொடுக்க வேண்டிய கூட்டுப் போஷாக்கு உணவும் உண்டு.

கறவைப் பசுக்களுக்கு பச்சைப் புல் போலச் சிறந்தஉணவு வேறில்லை. பாலில் பெரும் பகுதியாக விளங்குவது புரதம். அந்தப் புரதம் புல்லில் இருந்தே பெருமளவு கிடைக்கிறது.

வருடத்தில் பல நாட்கள் நாம் பசுவுக்குப் போடும் வைக்கோலில் 'ஸ்ராச்' எனப்படும் மாவுப் பொருளே அதிகம். ஆனல் அந்த வைக்கோலை ''யூரியா'' எனப்படும் இரசாயனக் கலவையுடன் பரிகரிப்புச் செய்வதால் புல்லில் இருந்து கிடைக்கும் புரதம் பசுவுக்கும், அதில் இருந்து பாலிலும் சேரும்.

இந்தச் சிறிய உத்தி குறித்து இதுவரை பிரசித்தம் இல்லை. இதைப் போல, எமது பொருள

(8ஆம் பக்கம் பார்க்க)

### செய்திச் சாரம்

சனத்தொகை:

## இன்று 500கோடி

லண்டன், ஜூலை 10

உலகின் சனத்தொகை இன்றுடன் ஐநூறு கோடியைத் தாண்டுகிறது.

- இப்படி உலக சனத்தொகை தொடர்பான உத்தியோக பூர்வ புள்ளி விவர அறிக்கை ஒன்று தெரிவிக்கிறது. (உ)

## 3 படையினர் பலி!

யாழ்ப்பாணம், ஜூலை11

கடந்த செவ்வாய்க்கிழமையன்று வெல்லாவெளி இராணுவ முகாமில் இருந்து சளுவாஞ்சிக்குடி நோக்கி கால் நடையாகச் சென்றஇராணுவத்தினர் மீது தாங்கள் நடத்திய தாக்குதலில் 3படையினர் கொல்லப்பட்டனர் என்றும் மூவர் படுகாயமடைந்தனர் என்றும் புலிகள் அறிவித்துள்ளனர். (உ-10)

## மனைவியை குத்திக்கொலை செய்த கணவன்

காரைநகர், ஜூலை 11

காரைநகர், வேதரடைப்பு பகுதியில் கணவர் ஒருவர் தமது மனைவியை குத்திக் கொலை செய்ததாகக் கூறப்படும் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இறந்தவரின் பெயர் தவமணி, வயது 22.

இவருக்கு தலையிலும் கன்னத்திலும் கத்திக் குத்துக் காயங்களும், கழுத்தை நெரித்தற்கான அடையாளமும் காணப்படுவதாகத்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## கொடிய பாம்பு கண்டுபிடிப்பு

ஜாவா, ஜூலை 10

மிகக் கொடிய விஷமுடைய வெள்ளைப் பாம்பு ஒன்று இந்தோனேஷியாவின் ஜாவாக் காட்டில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

இந்தப் பாம்பினால் தீண்டப்பட்டவர்கள் 10 நிமிடத்தினுள் உயிரிழந்து விடுவார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பாம்பு வாரத்துக்கு ஒரு தடவை தனது 'செட்டை'யைக் கழைகின்றது என்றும்—

5ஆயிரம் வர்க்கம் உடைய பாம்பு இனத்தில் மிகக் கொடிய விஷமுடைய 7 வகைப் பாம்புகளில் இதுவும் ஒன்று என்றும் கூறப்படுகிறது. (உ-10)

புதுமையும் எழிலும் பொலிவும் பல் [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அரசியற் கைதிகள்
# இன்று மறக்கப்பட்ட மனிதர்கள்

ஆங்கிலத்தில் என். சண்முகதாசன்
தமிழில் நிபன்ராஜா

அரசியல் காரணங்களுக்காக தடுத்து வைக்கப்பட்டிருப்பவர், தண்டனை விதிக்கப்பட்ட ஓர் அரசியல் கைதி அல்லர்.

நீதிமன்றத்தில் அவர் மீது குற்றஞ்சாட்டப்படவில்லை.

பெரும்பாலும் வெறும் சந்தேகத்தின் மீதும் அற்பகாரணங்களுக்காகவும் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்படுகின்றார் இவர்.

பெரும்பாலானவற்றில் ஆண்டுக்கணக்கில் அவர் மீது விசாரணைகளே நடத்தப்படுவது இல்லை.

கைது செய்து, தடுப்புக் காவலுக்கு உத்தரவிடுபவர்களே இப்படி ஒருவரைக்கைது செய்து தடுப்புக் காவலில் வைத்துள்ளோம் என்பதை மறந்து விடுகின்றார்கள்.

முகாமில் பல கஷ்டங்கள் மத்தியில் அவர் துன்பப்படுகின்றார்.

உறவினர்களும் நண்பர்களுமே அவரில் அக்கறை செலுத்துகின்றனர்.

சில சந்தர்ப்பங்களில், அந்த அக்கறை கூட, பல காரணங்களுக்காக நீண்ட நாளைக்கு நின்று பிடிப்பதில்லை.

ஸ்ரீலங்காவில் இன்று இப்படியான ஆயிரக்கணக்கானவர்கள் அரசியல் ரீதியில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். பெரும்பாலானோர் தமிழ் இளைஞர்கள்.

தென் இலங்கையில் முன்னர் குதிரைப் பந்தய மைதானமாகப் பாவிக்கப்பட்ட பூஸாவில் இவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இன்று பூஸா முகாம் கெட்ட பெயரெடுத்த இடமாக கருதப்படுகின்றது.

அரசுக்கு எதிராக சதி செய்தனர் என்றமுறைப்பாட்டின் மீது அண்மையில் கைது செய்யப்பட்ட சிங்கள இளைஞர்கள் பூஸா முகாமில் தடுத்து வைக்கப்படவில்லை.

அவர்கள் வேறு சிறைகள், பொலீஸ் நிலையங்களில் அடைக்கப்பட்டுள்ளனர்.

**கைதாகும் விதம்**

2 ஆயிரத்து 500 பேருக்குமேல் கொள்ளக் கூடியது பூஸா முகாம்.

இஸ்ரவேலைச் சேர்ந்த மொஸாட் உளவுப்படையின் ஆலோசனையின் பேரில்தான் பெரும் எண்ணிக்கையில் தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்படுகின்றனர்.

சந்தேக நபர்களைத் தேடிக் கண்டுபிடித்துக் கைது செய்வதிலும் பார்க்க, பெரும் எண்ணிக்கையில் தமிழ் இளைஞர்களைக் கூட்டாகக் கைது செய்து ஒரு இடத்தில் வைத்து விட்டு சந்தேக நபர்களை விசாரித்துக்கண்டுபிடிப்பது சுலபமான காரியம்- இதுவே மொஸாட் உளவுப்படையின் ஆலோசனை.

உதாரணத்துக்கு, தேடி, அழிக்கும் பணியில் செல்லும் இராணுவம், வழியில் கரபந்தாட்டம் விளையாடும் இளைஞர்களைக்காணுகின்றது; விளையாட்டைப் பார்த்து ரசிக்கும் பொதுமக்களையும் காணுகின்றது.

உடனே அவ்வளவு பேரையும் அள்ளி ஜீப், ட்ரக்குகளில் போட்டுக் கொண்டு சிங்களப்பகுதிகளில் உள்ள முகாம்களுக்குக் கொண்டு வருகின்றனர்.

இவர்கள் பற்றி விசாரணைகளை நடத்தி முடிப்பதற்கு அதிகாரவர்க்கம் எடுக்கும் காலம், கற்பனை செய்து பார்க்கமுடியாத ஒன்று.

பூஸா முகாமில் தடுத்து வைக்கப்பட்

பேசினேன்.

முகாமில் வசிப்பதற்கு உரிய நிலைமைகளைக் கேள்விப்பட்டு நான் அதிர்ச்சியடைந்தேன்.

**எனது அனுபவம்**

அரசியல் காரணங்களுக்காக நானும் 1971 இல் தடுத்து வைக்கப்

## தடுப்புக்காவல் அனுபவத்தைவிட பூஸா அனுபவம் மோசமானது

பட்டு இருந்தேன்.

ஜே. வி. பி கிளர்ச்சியைத் தொடர்ந்து திருமதி சிறிமாவோ பண்டாரநாயகாவின் தலைமையிலான ஐக்கிய முன்னணி அரசு என்னைத் தடுப்புக்காவலில் வைத்தது. பத்து மாதங்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்தேன்.

தடுத்து வைக்கப்பட்டவர்கள் என்ற முறையில் விளக்கமறியல் கைதிகள் போன்று நாம் நடத்தப்பட்டோம்.

விளக்கமறியல் கைதிகள் வீட்டில் இருந்து உணவு, உடை பெறலாம். உறவினர்கள் தினமும் வந்து சந்தித்துச் செல்லலாம்.

விசேட வர்த்தமானி மூலம் இச்சலுகைகளை பின்னர் ஐக்கிய முன்னணி அரசு ரத்துச் செய்தது.

அப்படியிருந்தும், இன்று பூஸா முகாமில் உள்ள அரசியல் கைதிகள் பராமரிக்கப்படும் நிலையிலும் பார்க்க நாம் நன்றாக அன்று நடத்தப்பட்டோம்.

பாடசாலை வகுப்பறைகள் போன்று கட்டப்பட்ட அறைகளினுள் தமிழ்க் கைதிகள் வைக்கப்பட்டிருக்கின்றனர்.

அறைகளின் மேல் பகுதி வலைகளினால் மூடப்பட்டுள்ளன. ஒவ்வொரு அறையும் 200 முதல் 250 பேரைக் கொள்ளக் கூடியதாகக் கட்டப்பட்டுள்ளது.

உள்ளே வைக்கப்பட்டுள்ளவர்கள் அனைவரும் எழுந்து நின்றால் போதுமான இடவசதி இருக்கும்.

**நித்திரை வசதி**

அனைவரும் நித்திரை கொள்ளும்போது தான் பிரச்சினை எழும்புகின்றது.

ஒருவர் தோளின் மீது தான் மற்றவர் நித்திரை கொள்ள வேண்டியிருப்பதாக எனக்குத் தெரிவிக்கப்பட்டது.

மற்றவரைக் குழப்பாமல் ஒருவர் அசைய முடியாது.

நான்கு, ஐந்து பேர் பாவிக்க ஒரு பாய்தான் வழங்கப்பட்டுள்ளது.

படுக்கை விரிப்புகள், தலையணை முதலியன கிடையா.

**இயற்கைக் கடன்**

மாலை 6 மணிக்கு அறைக்கதவு மூடப்பட்டு விட்டால் மறுநாள் காலை 6 மணி வரை திறக்கப்படமாட்டாது.

இயற்கைக்கடன் கழிக்கவோ, தண்ணீர் குடிக்கவோ இரவு முழுவதும் எவரும் வெளியே செல்ல முடியாது. இயற்கைக் கடன் கழிக்க என்ன செய்வார்கள் என்று நான் ஆச்சரியப்பட்டேன்.

பொலித்தீன் பைகள் பாவிக்கப்படுவதாக எனக்குத் தெரிவிக்கப்பட்டது. என்ன பயங்கர நிலைமை!

இயற்கைக்கடன் கழித்துவிட்டு கழுவுவதற்கே போதுமான தண்ணீர் வழங்கப்படுவதில்லை. துணிச்சல் மிக்க

பெற்றனர். இக்கடதாசி உள்ளே எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவது இல்லை.

நீண்ட காலமாக உறவினர்கள் சென்று பார்க்க அனுமதிக்கப்படவில்லை.

ஓராண்டு கழிந்த பின்

னர் உறவினர்கள் சென்று கைதிகளைப் பார்வையிட அனுமதிக்கப்பட்டனர்.

பார்த்த உறவினர்கள் அதிர்ச்சி அடைந்தனர். கைது செய்யப்பட்ட தினம் உடுத்தி இருந்த வேட்டி, சாரத்தையே கைதிகள் உடுத்தியிருந்ததே அதிர்ச்சிக்குக் காரணம்,

அதன் பின்னர் வேட்டிகள், சாரங்கள் கொழும்பில் சேகரிக்கப்பட்டுக் கைதிகளுக்கு வழங்கப்பட்டன.

**சந்திப்பு**

இப்போது வாரம் ஒரு முறை, அதுவும் ஐந்து நிமிடங்கள் மட்டும் சந்தித்துப் பேச உறவினர்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அப்படிச் சந்திக்கும்போது சி. ஐ. டி. அதிகாரிகள் அருகில் நிற்பர்.

இந்த நடைமுறையில் உள்ள அநியாயத்தைக் கற்பனை செய்து பாருங்கள்!

தென் இலங்கையின் தொங்கலில் உள்ளது பூஸாமுகாம்.

பெரும்பாலான தமிழ் கைதிகள், வடக்கு, கிழக்கைச் சேர்ந்தவர்கள்.

நீண்டதூரம் உறவினர்கள் பயணம் செய்து பூஸா வருகிறார்கள்.

அப்படி வருபவர்கள் தங்கள் அன்புக்குரியவர்களைச் சந்தித்துப் பேச வழங்கப்படும் நேரம் '5 நிமிடங்கள்' மட்டுமே.

நான் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த போது 3, 4 மாதங்கள் கழித்து உறவினர்கள் வந்து பார்க்க அனுமதிக்கப்பட்டனர்,

குறைந்தது 15 நிமிடங்கள், சில வேளைகளில்

அதற்குக் கூடுதலாகவும் எம்முடன் பேச உறவினர்கள் அனுமதிக்கப்பட்டனர்.

**உணவு**

ஆனால் பூஸாவில் வழங்கப்படும் உணவு மற்றும் கறிகளும் உண்ணுவதற்கே முடியாதிருப்பதாக கேள்விப்பட்டு வியப்படைந்தேன். அரிசிச் சாதத்துடன் கலந்து சாப்பிட சீனியும் நெஸ்பிறேயும் வீட்டில் இருந்து சில கைதிகள் பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

**சத்தியக்கடதாசி**

தடுப்பு முகாமிலிருந்து விடுவிக்கப்பட்டவர்களிடமிருந்து பெறப்பட்ட சத்தியக்கடதாசிகளை ஆதாரமாகவைத்து சர்வதேச மன்னிப்புச் சபை சித்திரவதைச் செயல்களை வெளிப்படுத்தியுள்ளது.

பெரும்பாலோர் மீதான குற்றச்சாட்டுக்களை அரசாங்கத்தினால் நிலை நிறுத்தமுடியாது என்பது வெளிப்படை.

நன்றி : தமிழ்டைம்ஸ் ★

**காத்தவன் என்பதே சரி**

மூன்றும் பக்கத்தில் பேராசிரியர் அ. சண்முகதாஸ் எழுதிய சட்டுரைக்குரிய தலைப்பின் இரண்டாவது வரியை 'காத்தவன் காவிய நயம்' என்று வாசியுங்கள். 'காத்தவராயன் காவிய நயம்' என தவறுதலாக அச்சாகியமைக்கு வாசகர்கள் மன்னிப்பார்களாக.

# பஞ்சாப் படுகொலைகள்
# ஒரு தொடர் கதையா?

சீக்கிய தீவிரவாதிகளால் இவ்வாரம் 73 பஸ் பயணிகள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

பஞ்சாப்பிலும், ஹரியானாவிலும் 24 மணி நேரத்துக்குள் நடந்த இரு வெவ்வேறு சம்பவங்களில் இப்படுகொலைகள் இடம் பெற்றுள்ளன.

இதில் இறந்தவர்கள் அனைவரும் இந்துக்களே.

ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் சீக்கியர்களால் தனிநாட்டுப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் இடம் பெற்றுள்ள மிக மோசமான சம்பவங்களாக இப்படுகொலைகளை அவதானிகள் கருதுகின்றனர்.

இதனை அடுத்து வட இந்திய நகரங்களில் பெரும் அளவு சீக்கிய எதிர்ப்புக் கலவரங்கள் இடம் பெற்று வருகின்றன. இந்துக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட ஹரியானாவில் கடைகள் பூட்டப்பட்டு பந்த்(ஹர்த்தால்)அனுஷ்டிக்கப்படுகிறது.

வட இந்திய நகரங்கள் முழு அளவில் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் 13 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் வரை இது தொடர்ந்து அமுலில் இருக்கும்.

ஜனாதிபதித்தேர்தலில் மீண்டும் போட்டியிடப் போவதில்லை என்ற ஜெயில் சிங்கின் முடிவினாலும்—

கருத்து மோதலால் பதவியை ராஜினாமாச் செய்த செல்வாக்குமிக்க பாதுகாப்பு அமைச்சர் வி. பி. சிங் தொடர்ந்து ராஜீவ் தலைமையிலான அரசை ஆதரிக்கப்போவதாக அறிவித்திருப்பதாலும் பஞ்சாப் பிரச்சினையில் முழு அளவில் கவனம் செலுத்த ராஜீவுக்கு அவகாசம் கிடைத்திருக்கிறது.

ஜனாதிபதித் தேர்தலில் இந்திரா காங்கிரஸ் சார்பில் உப ஜனாதிபதி வெங்கட்ராமனும் எதிர்க்கட்சிகள் சார்பில் முன்னாள் பிரதம நீதியரசர் கிருஷ்ணய்யரும் மற்றும் ஒரு சுயேச்சை வேட்பாளரும் போட்டியிடுகின்றனர்— முதல் இருவரும் திராவிடர்கள்.

இந்தியா சுதந்திரம் அடைந்த பின்பு ஜனாதிபதி பதவிக்கு மூவர் போட்டியிடுவது இதுவே

## அணுகுமுறைகள் மாறினாலும் பிரச்சினை தீர்ந்தபாடில்லை!

முதல்தடவை.

**சமாதானப் பேச்சு இல்லை**

சீக்கியர்களின் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும்வரை பஞ்சாப் தொடர்பான சமாதானப் பேச்சுக்களுக்கு இடம் இல்லை என்று பிரதமர் ராஜீவ் காந்தி அறிவித்துள்ளார்.

பஞ்சாப்பில் முதலமைச்சர் சுர்ஜித்சிங் பர்னாலா தலைமையிலான அகாலிதள் அரசு கலைக்கப்பட்டு ஜனாதிபதி ஆட்சி பிரகடனப்படுத்தப்பட்டிருப்பதால் ஏற்கனவே சமாதான முயற்சிகள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன.

1984 ஆம் ஆண்டு திருமதி இந்திராகாந்தி படுகொலை செய்யப்படுவதற்கும் அதன் பின்பு பதவிக்கு வந்த அவரின் மகன் ராஜீவ் காந்தி அரசியலில் தலையெடுக்க முடியாத நிலைமை நீடிப்பதற்கும் இந்தப் பஞ்சாப் பிரச்சினைதான் மூல காரணம் ஆகும்.

திருமதி இந்திரா காந்தி பஞ்சாப் பிரச்சினையில் கடைப்பிடித்த அணுகுமுறை இறுதியில் அவரது உயிருக்கே உலை வைத்தது.

அதாவது இப்பிரச்சினையில் அதி தீவிரவாதிகளான பிந்தரன்வாலே குழுவினருக்குச் சாதகமாகச் செயற்பட்டுத் தீர்வு காண அவர் முயற்சி எடுத்திருந்தார்,

இறுதியில் தீவிரவாதிகளே அவரின் உயிரைப் பலி எடுத்தனர்.

ஆனால் ராஜீவ்காந்தி தமது தாயாரான இந்திரா காந்தியின் மறைவுக்குப் பின்னர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான அணுகுமுறையை மாற்றியபோதிலும் அதுவும் வெற்றி அளிக்கத் தவறிவிட்டது.

**நிறைவேறாத ஒப்பந்தம்**

1985ஆம் ஆண்டு மிதவாதியானலோங்கோவாலுக்கும் ராஜீவ்காந்திக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் இதுவரை அமுல் செய்யப்படவில்லை.

மாறாக இந்த ஒப்பந்தம் ஹரியானாவிலுள்ள பெரும்பான்மை இந்துக்கள் மத்தியில் பெரும் அதிருப்தியையே ஏற்படுத்தியிருந்தது.

பஞ்சாப்பில் ஜனாதிபதி ஆட்சியைப் பிரகடனப்படுத்தியதன் மூலம் இந்த ஒப்பந்தத்தின்

காந்தி செயல் இழக்கச் செய்துள்ளபோதிலும் பெரும்பாலான இந்துக்கள் ராஜீவ் காந்தியின் தலைமையை நம்பத் தயாரில்லை என்பதையே

கருத்துக்களை ராஜீவ் ஹரியானா தேர்தல் முடிவுகள் எடுத்துக் காட்டின.

தற்போது ஹரியானாவில் தேவிலால் தலைமையிலான எதிர்க்கட்சிக் கூட்டணி ஆட்சியில் இருப்பதால் ஹரியானாவில் உள்ள பெரும்பான்மை இந்துக்களின் அபிலாஷைகளை பெரும் அளவில் கவனத்தில் கொள்ளாமல் பஞ்சாப் பிரச்சினையை அணுகுவதற்கு ராஜீவ்காந்திக்கு சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது.

இப்பிரச்சினை மேலும் இழுபட்டால் தற்போதைய படுகொலைகள் தொடர்கதையாகும் ஆபத்து இருந்து வருகிறது. ★

# உலக உலா

## சிவானந்தரின் போதனைகள்

காலை நான்கு மணிக்கு விழித்தெழு. ஜபமும் தியானமும் செய்.

ஜபம், தியானம் செய்வதற்கு சித்த ஆசனம் அல்லது பத்மாசனத்தில் உட்கார்.

சாத்விகமான உணவைப் புசி. வயிற்றை வரம்பின்றி நிரப்பாதே.

உன் வருமானத்தில் பத்தில் ஒரு பங்கைத் தருமஞ் செய்.

ராஜஸ உணவு, மதுபானம், புகைபிடித்தல் ஆகியவைகளை விட்டு விடு.

தினந்தோறும் இரண்டு மணி நேரம் மௌனத்தைக் கடைப்பிடி. உணவருந்தும் போது பேசாதே.

எவ்விதத்திலும் உண்மையே பேசு. குறைவாகவும் இனிமையாகவும் பேசு.

உன்னுடைய தேவைகளைக் குறைத்துக் கொள். திருப்தியாக சந்தோசமாக வாழ்க்கை



சுவாமி சிவானந்தர்

நடத்து.

இன்று அவரின் நினைவு தினம்.

# யுத்த முனையில் ஒரு தளர்ச்சி;
# எந்தநேரமும் சண்டை மூளலாம்

தமிழீழ விடுதலைப் புலிகள் போர் புரிகின்றனர். அவர்களிடம் தீவிரம் உண்டு.

ஆஸ்திரேலியப் பத்திரிகையாளர் ரொபர்ட் மக்டொனல்ட் 'இந்து' வுக்கு அளித்த பேட்டியில் இதனைத் தெரிவித்தார்.

மே மாதம் 17 ஆம் திகதி முதல் யாழ் குடாநாட்டில் தங்கி இருந்த திரு. மக்டொனல்ட் சென்ற ஜூன் 30 ஆம் திகதி படகு மூலம் தமிழ் நாடு சென்றடைந்தார்.

இப் பத்திரிகையாளர் மேலும் சொன்னதாவது:

வடபகுதியில் என்ன நடைபெறுகின்றது என்பதற்கு தெல்லிப்பழை நல்ல உதாரணம்.

மோட்டார் ஷெல்கள் எந்த நேரமும் வந்து விழுந்தபடியே இருந்தன. பீரங்கிப் படகுகள் சுட்டபடியே இருந்தன.

நான் விடுதலைப் புலிகள் வைத்திருந்த 50 மி. மீ மெஷின் துப்பாக்கிக்கு அருகே நின்று கொண்டிருந்தேன். நூறு அல்லது ஐம்பது மீட்டர்

மணித்தியாலங்களில் இராணுவம் வந்தது. பையன்கள் பின்னே தள்ளப்பட்டனர். சிப்பாய்கள் அச்சுவேலிக்குள் வந்தனர். 3 தினங்களின் பின்னர் திரும்பிச்சென்றனர்.

என்ன நடக்கின்றது என்பதை நீங்கள் பார்க்க முடியாது. எந்த நேரமும் ஷெல்கள் விழுகின்றன; துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தில் வேறு விதமான யுத்தம். குண்டுகள் விழுவதுதான் தெரியும், ஒருநாள் முழுவதும் யாழ் பட்டினத்தில் இருந்தேன். அவர்கள் குண்டுமாரி பொழிந்த வண்ணமே இருந்தனர்.

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் இருந்து சுமார் 100மீட்டர் தள்ளி இருந்த சகல கடைகளும் விமானக் குண்டுத்தாக்குதலால் சேதமடைந்தன. 55 கிலோ எடையுள்ள குண்டுகளே போடப்பட்டன. [illegible] கத்தையே உருவாக்கக் கூடியதான குண்டுகள் அவை.

வீட்டின் பின்னால் ஒரு நீச்சல் தடாகம் வந்து விடும்.

வின்ஸர் சினிமா குண்டினால் தாக்கப்படும் போது நான் அருகில் இருந்தேன். நான் நின்ற இடத்தில் இருந்து 50 மீட்டர் தூரத்தில் ரொக்கட்டுகள் வெடித்தன.

விமானத் தாக்குதல்களின் பின்னர் சேதமடைந்த வீடுகளைப் பார்வையிட்டேன்.

உணவுப்பொருள் விநியோகத்துக்காக இந்திய செஞ்சிலுவைச்சங்கம் யாழ் வந்தது.

'உணவு வேண்டாம்; சாம் ஏவுகணை தான் வேண்டும்' — இப்படிச் சுவரொட்டிகள் எங்கும் காட்சியளித்தன.

தமிழில் எஸ். ஜி.

யுத்தமுனையில் ஒரு தளர்ச்சி காணப்படுகின்றது. எந்த நேரமும் சண்டை மூளலாம்.

[illegible] என்றாலும் மக்கள் மிகுந்த நம்பிக்கையுடன் இருக்கின்றார்கள்.

கள் நம்பிக்கொண்டிருக்கிறார்கள்.

எதை நம்பிக்கொண்டிருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியவில்லை.

இராணுவத் தாக்குதலுக்கு பதிலடி கொடுக்க விடுதலைப்புலிகள் தயாராகிக் கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் பயிற்சி பெறுகின்றனர்.

பிலிப்பீன்ஸில் நான் சந்தித்த கெரில்லாக்களிலும் பார்க்க தமிழீழ விடுதலைப்புலிகள் வேறுபட்டவர்கள்.

தாங்கள் இராணுவ பலம் பொருந்தியவர்கள் என்பதை விடுதலைப்புலிகள் காட்டி வருகின்றார்கள்.

பிலிப்பீன்ஸ் கிளர்ச்சிக்காரர்கள் நிறைய அரசியல் பேசுகின்றார்கள்; சண்டைக்குச் சிறிய இடம் கொடுக்கின்றார்கள்.

ஆனால் தமிழீழ விடுதலைப்புலிகள் போராடுகின்றனர். தீவிரம் நிறைந்தவர்கள். — என்றார்.

(இந்து நாளிதழில் 3-7-87 இல் வெளியான செய்தியின் தமிழாக்கம்


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## பட்டப்பின்படிப்பிற்காகப் பதிவுசெய்தல்

**1987 / 1988**

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் 1987/88 கல்வியாண்டின் பின்வரும் பாடநெறிகட்கு பட்டப்பின் படிப்பிற்காக தகுதி பெற்றவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பொருளியல், புவியியல், இந்துநாகரிகம், வரலாறு, தமிழ், மெய்யியல், கல்வியியல்.

அறிவுறுத்தல்களுடன் சேர்ந்த விண்ணப்பப் படிவங்கள் நேரடியாகவோ அன்றி தபால் மூலமாகவோ கலைப்பீடாதிபதி அலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

நேரடியாக விண்ணப்பப்படிவங்களைப் பெறவிரும்புவோர் பல்கலைக்கழக நிதியாளரிடம் ரூபா 25/- செலுத்திப் பெறப்பட்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவம் பெற வரும்போது சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகின்றனர். தபால் மூலம் பெறவிரும்புவோர் நிதியாளரின் பெயருக்கு எழுதப்பட்ட 25/ ரூபாவிற்கான காசுக்கட்டளை அல்லது தபாற்கட்டளையுடன் 5ரூபா 75சதம் பெறுமதியான முத்திரைஒட்டிய38 × 25ச.மீ. அளவுடைய தபால் உறையினையும் அனுப்புதல்வேண்டும்.

பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் 7.8.87 இற்கு முன்பாக, கலைப்பீடாதிபதி அலுவலகத்தில் ஏற்றுக்கொள்ளப்படும். 7.8.87இற்குப் பின்பு வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

ர. நாகராஜா
உதவிப் பதிவாளர்,
கலைப்பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
3.7.1987


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய ஜனாதிபதி தேர்தற் களத்தில்

# வெங்கட்ராமனுக்கு வெற்றி வாய்ப்பு

எட்டாவது இந்திய ஜனாதிபதியைத் தெரிவு செய்யும் தேர்தல் நாளை மறுநாள் நடைபெறும்.

இத்தேர்தலில்போட்டியிடும் ஆளும் காங்கிரஸ் வேட்பாளர் வெங்கட்ராமன், எதிர்க்கட்சி வேட்பாளர் கிருஷ்ண ஐயர், இருவரும் பிரபல்யமானவர்கள்.

வெங்கட்ராமன்,வழக்கறிஞர், விடுதலைப் போராட்டவீரர், தொழிற்சங்கவாதி, பல அமைச்சுகளுக்குப் பொறுப்பாய் இருந்தவர், ஐ. நா. ஆணைக் குழுக்களில் அங்கம்வகித்தவர்.

கிருஷ்ண ஐயர் ஒரு வழக்கறிஞர், ஓய்வுபெற்ற நீதிபதி, மாநில சபை உறுப்பினராக இருந்தவர், விடுதலை இயக்க ஈடுபாடு உள்ளவர்.

அவர் நீதியரசராக இருந்தபோது சமுதாயப் பார்வையுடன் தீர்ப்புகளை வழங்கியவர். இலங்கை இனப்பிரச்சினையில் தமிழர் நலனில் ஈடுபாடு காட்டுபவர். ராஜீவ் காந்தியின் மென்மைப் போக்கினைக் கண்டித்தவர்.

### இருவர் கொள்கைகள்

இத்தேர்தலை ஒரு தீர்ப்பாகக்கருதுகிறேன். ஜனாதிபதி - பிரதமர் உறவுகள் எப்படி அமைய வேண்டும் என்பதே அந்தத் தீர்ப்பு.

ஜனாதிபதி வெறும் சடங்குப் பொருளா, அரசியல் சாசனரீதியான ஒரு பூஜ்யமா, ஓர் ஊமையா, இல்லை சாசனத்துக்கு அமைவான செயற்பாட்டாளரா? — என்பதே இங்கு நிர்ணயிக்கப்படவேண்டியது.

— இப்படிப் போர்க்குரல் எழுப்பியுள்ளவர் கிருஷ்ணஐயர்.

அதேவேளை வெங்கட்ராமனே இவ்வுறவுபற்றி ஆங்காங்கே பிரச்சினைகள் வரும்போது தீர்த்துக்கொள்ளவேண்டியது என்று தெட்டத்தெளிவாகக்கூறியுள்ளார். பிரதமர் மக்களின் நேரடி வாக்குகளால் தெரிவுசெய்யப்பட்ட நிறைவேற்று அதிகாரம் உடையவர். எனவே ஜனாதிபதி சில அரசியல் சாசன வரம்புகளுக்கு உட்பட்டு செயற்பட வேண்டியவர் — என்பதே இவரது கொள்கை.

ஜனாதிபதி வேட்பா



வெங்கட்ராமன்

ளர் எவ்வித கொள்கைப் பிரகடனத்தையும் செய்யமுடியாது. இங்கு நடைபெறுவது நாடாளுமன்ற ஆட்சி. ஜனாதிபதி ஆட்சி அல்ல — என்றும் கூறியுள்ளார்.

### ஜனாதிபதியின் அதிகாரங்கள்

அரசாங்கத்துக்கு ஆலோசனை கூறுதல், எச்சரிக்கை செய்தல், அரசாங்க கொள்கைகளைப் பற்றி அபிப்பிராயம் கூறுதல், தகவல்கள் கோருதல், நாடாளுமன்றம் நிறைவேற்றிய பிரேரணைகளைமந்திரி சபைக்கும் மீளாய்வுக்கும் அனுப்பிவைத்தல், எல்லை கடந்த நிலையில்நாடாளுமன்றத்துக்கு ஒரு செய்தியை- அனுப்பிவைத்தல் என்பன ஜனாதிபதியின் அதிகாரங்கள் ஆகும்.

ஜனாதிபதியின் அதிகாரம் தொடர்பாக இந்திய அரசியல் யாப்பின் 74.78வது ஷரத்துகள் சர்ச்சைக்கு உரியவை.

அவ்வுயர்ந்த பதவிக்கு சுதந்திரப்போராட்ட வெற்றியின் மாண்பினை எளிமை, சத்தியம் ஆகிய சிறப்பினை ஏற்றியவர் முதலாவது ஜனாதிபதி இராஜேந்திர பிரசாத்.

டாக்டர் ராதா கிருஷ்ணனால் அப்பதவியை தத்துவ ஞானச்சீர் சேர்ந்தது.

புதிய ஜனாதிபதி இப் [illegible] சிறப்பைச் சேர்ப்பார்?

### இராஜேந்திர பிரசாத்

இந்திய அரசியல் சாசன வரலாற்றிலேயே ஜனாதிபதி - பிரதமர் பதவி வழி அதிகார மோதல் ஆரம்பித்ததைச் சற்றுப் பார்ப்போம்.

அரச வைபவம் எனது அங்கீகாரத்தை அளிக்கு முன்னர் அதனை ஆராய்ந்து கருத்துவெளியிடும் உரிமை உண்டு'' என்ற தோரணையில் அவர் செப்டம்பர் 1951 இல் நேருவுக்குக் கடிதம் எழுதினார்.

அரசாங்கத்தினதும், நாடாளுமன்றத்தினதும் டங்களை அனுமதிக்க மறுத்தார். வேலை நிறுத்தம் செய்த புகையிரதத் தினைக்கள ஊழியர்களை மத்திய அரசு வேலை நீக்கஞ் செய்ய எடுத்த முடிவை வன்மையாக எதிர்த்தார். இது இந்திரா பிரதமராக இருந்தபோது.

உயர் நீதிமன்ற நீதிபதிகளின் நியமன விடயத்தில் ஜனாதிபதி தலையிட்டார். ஹரியானா பஞ்சாப் மாநில அரசுகளால் சிபார்சு செய்யப்பட்ட ஒருவரின் நியமனத்தை அரசு நிராகரித்ததைச் சுட்டிக் காட்டினார். இதனால் பிரதமர் பின்வாங்க பதியை அவரது உத்தியோக வாசஸ்தலம் சென்று சந்திக்கும் சம்பிரதாயத்தையும் முக்கிய பிரச்சினைகளில் அவரைக் கலந்தாலோசிக்கும் மரபையும் பிரதமர் கைவிட்டார்.

ஜனாதிபதி வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்ள முன்னர் அவரைச் சந்தித்து நாட்டின் வெளிவிவகார நிலைப்பாட்டை விளக்கும் நடைமுறையைக் கைவிட்டார்.

அத்துடன் ஜனாதிபதியின் வெளிநாட்டுப் பயணங்கள் பலவற்றுக்கு அரச அனுமதி வழங்காது விட்டதுடன் அவருக்குப் பதிலாக உபஜனாதிபதியை அனுப்பினார்.

அடிக்கடி ஏற்படும் மந்திரி சபை மாற்றங்களை ஒட்டி ஜனாதிபதிக்கு முன் அறிவித்தல் கொடுப்பதில்லை.

## ராஜ்பவன் பக்கிங்காம் அரண்மனையா இல்லை வெள்ளை மாளிகையா - என்பதே சர்ச்சை

ஒன்றை 26ஆம் தேதிக்கு நேரு அரசு ஒழுங்கு செய்தபோது அப்போதைய ஜனாதிபதி இராஜேந்திரபிரசாத்சோதிட காரணங்களுக்காக



ராஜீவ்

எதிர்த்தார். உடனே—நான் சாஸ்திர அடிப்படையில் ஆட்சி செலுத்தவில்லை. அப்படியானால் ஒரு சோதிடரை அல்லவா நாடு பிரதமராகத் தெரிவு செய்ய வேண்டும்—என்று கோபித்தார் நேரு.

இந்து கோட்பாட்டுச் சட்டம் சம்பந்தப்பட்ட பிரேரணை நாடாளுமன்றத்தில் நிறைவேற முன்னரே பத்திரிகைச் செய்தியைக் கண்டதும் பிரசாத் பிரதமர் நேருவுக்கு ஒரு கடிதம் எழுதினார்.

'இந்தப் பிரேரணைக்கு தீர்மானங்களுக்கு ஜனாதிபதியின் அதிகாரங்கள் ஒரு சவாலாக அமையலாம் என்பது உங்கள் கடிதத்தின் தொனியாகும். இதனால் ஜனாதிபதி ஒருபுறமும், அரசாங்கம் நாடாளுமன்றம் மறுபுறமும் அமைய ஒரு அரசியல் சாசன மோதல் இடம்பெறலாம்.

மந்திரி சபையின் ஆலோசனையின் பேரில் தான்ஜனாதிபதி நாடாளுமன்றத் தீர்மானங்களுக்கு அங்கீகாரம் அளிக்கவோ, மறுக்கவோ, அல்லது மறுபரிசிலனைக்கு உத்தரவு கொடுக்கவோ முடியும்—

இப்படி பிரதமர் நேரு பதில் அனுப்பினார்.

### ஜனாதிபதி ராதா கிருஷ்ணன்

தத்துவமேதை எஸ். இராதாகிருஷ்ணன் ஜனாதிபதியாக இருந்தவேளையில் சீனப்போரின் பின்னர், கிருஷ்ண மேனனை பாதுகாப்பு அமைச்சர் பதவியில் இருந்து நீக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார்.

### ஜனாதிபதி கிரி

தொழிற்சங்கவாதியான வி.வி. கிரி ஜனாதிபதியாக இருந்த காலகட்டத்தில் தொழிலாளர்களைப் பாதிக்கும் சட்

நீண்ட காலமாகத் தொடர்ந்துவரும் ஓர் அரசியல் சாசன பிரச்சினை பின்னர் பாரிய வடிவம் எடுத்து ராஜீவ் ஷெயில்சிங் மோதலாக உருவாகியது.

### ஜனாதிபதி ஷெயில் சிங்

சென்றஆண்டு ஆகஸ்ட் மாதம் ஜனாதிபதியின் ஒலிப்புதிவு செய்யப்பட்ட சுதந்திர தின உரையில் இரு பந்திகள் நீக்கப்பட்டன. இதனால் ஆத்திரமடைந்த ஜனாதிபதி அரசாங்கத்துக்குக் கடிதம் ஒன்றைக் கடுமையான தொனியில் எழுதினார்.

மிஸோரம் இணக்கம் சம்பந்தமாக அரசாங்கத்தின் நிலைப்பாட்டைக் கண்டித்துக் கடிதம் எழுதினார். இதனால் ஆத்திரமடைந்த பிரதமர் ராஜீவ் 'நீங்கள் உள்துறை அமைச்சராக இருந்த காலத்தில் உருவான பிரச்சினையைத் தீர்க்க முயல்கிறோம்'— என்று சுடச்சுடப் பதில் எழுதினார்.

இவற்றினால் ஆத்திரம் அடைந்த ஜனாதிபதி தனக்கு அனுப்பி வைக்கப்படும் கோவைகளை நன்கு பரிசீலித்து பதில் எழுதும் முயற்சிகளை மேற்கொண்டார்.

வேண்டிய நிலை உருவானது.

ஆந்திர பிரதேச கவர்னர் குமுட்பென்



நேரு

ஜோசியை மாநில அரசியலில் தலையிட வேண்டாம் என்று எச்சரிக்கை செய்தார்.

குடிமக்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் ஜனாதிபதி கரிசனை காட்டினார். இது அரசாங்கத்துக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தியது.

தேர்தல் ஆணையாளரை நேரில் அழைத்து ஹரியானா தேர்தல் நடத்துவதில் ஏற்பட்ட தாமதம் பற்றி அறிந்து கொண்டார்.

அதேவேளையில் ஜனாதி

- வே. வரதசுந்தரம் -

### தேர்தல்முறை

இந்திய ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் நேரடியாகப் பங்கு பெறுவதில்லை. தேர்தல் குழுமங்கள், வாக்குகள், வாக்குப் பெறுமானம் என்ற ஏற்பாடுகள்மூலம் இத்தேர்தல் நடைபெறும்.

இந்திய நாடாளுமன்றத்தின் இருசபைகளின் தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவர்கள் (லோக்சபா 542, ராஜ்ய சபா 232)

24 மாநில அரசுகளின் சட்டசபைகளில் உள்ள தெரிவுசெய்யப்பட்ட அங்கத்தவர்கள்- இத்தேர்தலில் பங்குபெறும் தகைமையுடையவர்கள்.

மாநில அரச சட்டசபைகளில் ஆளுங்கட்சி அணியினருக்கும் நேச அணிகளுக்கும் 307,215 வாக்குப் பெறுமானமும், எதிர்க்கட்சிகளுக்கு 234,800 வாக்குப்பெறுமானமும் உண்டு.

லோக்சபா, இராஜ்ய சபா ஆகிய இரண்டிலும் ஆளும் காங்கிரஸ்-நேச அணிகளுக்கு 417,



கிருஷ்ணஐயர்

582 எதிர்க்கட்சி அணிகளுக்கு 126, 540 என்ற வாக்குப் பெறுமானம் உண்டு.

இந்தவகையில் வெற்றி வாய்ப்பு வெங்கட்ராமனுக்கு உண்டு.

உலக அரங்கில் அணிசேராக் கொள்கை, அணுவாயுதத் தடை, உலக சமாதானத்,தென்னாபிரிக்கக் கறுப்பினத்தவர், இலங்கைத் தமிழர் போன்ற ஒடுக்கப்பட்ட இனங்களின் நலன் ஆகியவற்றுக்கு இந்திய அரசு குரல் கொடுத்துச் செயற்படும் இவ்வேளையில்,

இந்திய அரசுக்குப் பல்வேறு கோணங்களில் இருந்தும் அச்சுறுத்தல்கள் ஏற்படும் இவ்வேளையில்,

இந்திய ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ வாசஸ்தலமான ராஜ்பவன், பிரித்தானிய பக்கிங்காம் அரண்மனையை அல்லாமல் அமெரிக்க வெள்ளை மாளிகையை ஒத்திருக்க வேண்டும் என்ற நிலைப்பாடு தேர்தல் முடிவாக அமையுமானால்,

இத்தேர்தல் முடிவினால் ஜனாதிபதி - பிரதமர் உறவு நலிவடைந்து உட்பூசல் ஏற்படின்,

அது இந்தியாவுக்கும் நல்லதல்ல.

உலகில் அமைதி, ஜனநாயகம், சுதந்திரம் நாடும் மக்கள் நாடுகளுக்கும் ஆரோக்கியமானதல்ல. ★

# கத்தோலிக்கர் இன்னல் பாடும் காத்தவராயன் காவிய நயம்

தமிழ் இலக்கியத்தின் காவிய வரலாறு தனித்துவமானது. தமிழிலே தோன்றிய இலக்கிய வடிவங்களுட் காவியம் அளவாலே பெரியது. காவியம் என்னும் பெயரைக் கொள்ளாது தமிழிலே முதன்முதல் தோன்றிய பேரிலக்கியம் சிலப்பதிகாரம் ஆகும். அதைத் தொடர்ந்து மணிமேகலை தோன்றிற்று.

தண்டியாசிரியர் காவியம்பற்றி இலக்கணம் வகுத்துள்ளார். அவ்விலக்கணத்தைப் பின்பற்றி சிவகசிந்தாமணி, சூளாமணி, கம்பராமாயணம், பெரியபுராணம் போன்ற காவியங்கள் தமிழிலே தோன்றின. இவ்வாறு காவிய இலக்கணத்தைப் பின்பற்றி எழுந்த நூல்களுள் 'காவியம்' என்ற சொல்லினையும் நூல் தலைப்பினுடன் சேர்த்துக் கொண்டனவாக யசோதர காவியம், உதயண குமார காவியம், நாககுமார காவியம் என்னும்இலக்கியங்கள்அமைகின்றன. இவற்றுக்குப் பின்னர் ஈழத்துப் பூலோகசிங்க அருளப்ப நாவலர் பாடிய திருச்செல்வர் காவியம் குறிப்பிடற்பாலது.

இருபதாம் நூற்றாண்டிலே சுத்தானந்த பாரதியார் பாடிய பாரதமகா சக்தி காவியமும் அதைத்தொடர்ந்து கவிஞர் கண்ணதாசன் பாடிய இயேசு காவியமும் தோன்றின. இவற்றினைத் தொடர்ந்து இப்பொழுது கவிஞர் தேவதாசனின் காத்தவன் காவியம் வெளிவருகின்றது.

இஸ்லாமியரும் மேலைத்தேயவரும் தமிழ் நாட்டுக்கு வருவதற்கு முன்னர், சைவ, வைணவ, சமண, பௌத்த மதக் கதைகளையும் கருத்துக்களையும் அடிப்படையாகக் கொண்டே காவியங்கள் அல்லது தொடர்நிலைச் செய்யுள் நூல்கள் தோன்றலாயின. காவிய வடிவத்தினைப் புராணம் எனவும் வழங்கலாயினர். பெரியபுராணம் இதற்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

இம்மரபினைப் பின்பற்றி இஸ்லாமிய சமயக் கருத்தை அடிப்படையாகக் கொண்டு உமறுப் புலவர் சிறுப்புராணம் என்னும் காவியத்தைப் படைத்தார்.

கிறிஸ்தவ சமயத்தைச் சார்ந்தவர்களும் தம் சமயக் கருத்துக்களைக் காவிய வடிவ மூலமும் பரப்பலாயினர். வீரமாமுனிவர் என அழைக்கப்பட்ட பெஸ்கி பாதிரியார் பாடிய தேம்பாவணி தமிழிலே தோன்றிய முதற் கிறிஸ்தவ காவியமாகும். இவ்வாறு தோன்றிய கிறிஸ்தவ மதக்காவிய வரலாற்றிலே கவிஞர் தேவதாசனின் காத்தவன் காவியமும் இடம்பெறுகின்றது.

தண்டியாசிரியருடைய காவிய இலக்கணத்தின் படி கதை நாயகன் அல்லது தலைவன் நாடு,நகர், ஆற்று வர்ணனைகள் கூறி, அத்தலைவனுடைய பிறப்பும் அதைத் தொடர்ந்து கதைகளும் கூறப்படும் காத்தவன் காவிய ஆசிரியரோ தன்னுடைய நூலில் நவீன புனைகதைகளிலே கையாளப்பட்டுவந்த ஓர் உத்தியினைக் கையாண்டே காவியக்கதையை நடத்திச் செல்கிறார். காவியத்தின் கதைத் தலைவர் யோசேவ்வாஸ் முனிவர் ஆவார். இவர் ஈழத்து வரலாற்றிலே ஓர் இடம் பெறுபவர். கி. பி. பதினேழாம் பதினெட்டாம் நூற்றாண்டுகளிலே இலங்கையை ஆண்ட டச்சுக்காரர் தாம் இந்நாட்டிலே புகுத்திய புரட்டஸ்தாந்து சமயத்தைத் தவிர வேறெந்தச் சமய வழிபாடுகளும் இம்மண்ணிலே நடைபெறக் கூடாதெனத் தடைவிதித்தனர்.

சைவசமயத்தினர் பயந்து பயந்து ஆட்சியாளர்களுக்குத் தெரியாமல் தமது சமய வழிபாடுகளையும் ஆசாரங்களையும் கடைப்பிடித்தனர். கத்தோலிக்க சமயம் முற்றாகத் தடை செய்யப்பட்டிருந்தது. இவர்களுக்கு ஏற்பட்ட துன்புறுத்தல்கள் தொடர்பாக வரலாற்றாசிரியர்கள் பலர் கருத்துத் தெரிவித்துள்ளனர். இவ்வேளையிலே தான் யோசவ்வாஸ் முனிவர் கத்தோலிக்க திருச்சபை சார்பில் தன் தியாகச் சேவையிலீடுபட்டார்.

காத்தவன் காவியத்தின் தொடக்கம் கத்தோலிக்க மதம் கீழைத்தேசங்களில் எவ்வாறு பரவிற்று. அது தொடர்பான சில வரலாற்று நிகழ்வுகளைக் கூறிச் செல்கிறார். புனித [illegible] பிரான்சிஸ்கு சபையினர் [illegible] இலங்கையில் கத்தோ

(6 ஆம் பக்கம் பார்க்க)

பேராசிரியர் அ. சண்முகதாஸ்



வாடிக்கையாளர்:- என்ன கந்தையா,இப்ப பதுங்கு குழி வேலைக்கே போறாய்?

கந்தையா:- நான் சீவிற மரமெல்லாம் பதுங்கு குழி மூட தறிச்சுப் போட்டினம். அதாலைதான் தொழிலை மாத்திப் போட்டன்.

— நல்லூரான் —

# சிற்பக் கலைக்கு ஒரு தனித்துறை பல்கலைக் கழகத்தில் வேண்டும்

சிற்பக் கலைக்குக் ஊக்கம் அளிப்பதனால் பல்கலைக் கழகத்தில் இதற்கெனத் தனிப்பிரிவு உருவாகவேண்டும்.

—இப்படிக் கூறுகிறார் சித்தன் கேணி பிளவத்தை என்னும் கிராமத்தைச் சேர்ந்த பிரபல சிற்பாசிரியர் திரு. ச. கணேசமூர்த்தி.

இவரின் வாழ்க்கை சிற்பக் கலைத்துறைகளில் ஈடுபடும் கலைஞர்களுக்கு எடுத்துக்காட்டானது. இவரின் அடக்கமான வாழ்க்கையையும் கலைத்திறமைகளையும் ஏனைய கலைஞர்களும் அறிந்திருப்பது அவசியமானதல்லவா?

கேள்வி:- நீங்கள் எந்த ஆண்டிலிருந்து சிற்பக் கலைத்துறையில் ஈடுபட்டு வருகிறீர்கள்?

சிற்பக் கலைத்துறையைத் தொழிலாகக் கொண்டதாகச் சொல்வதானால் 1959ல் இருந்து என்றுதான் சொல்லவேண்டும்? ஆனால்;

கேள்வி:- முடிவாகச் சொல்லாமல், ஆனால் என்று இழுத்துச்சொல்வதில் ஏதோ அர்த்தம் இருக்கிறது. இதற்கு முன்னரும் ஏதாவது செய்திருக்கிறீர்களா?

ஆமாம். நான் பள்ளிச் சிறுவனாக இருக்கும்போது சகலவிதமான கலைத்துறைகளி[illegible]கின் றேன். மக்கியில் பொம்[illegible] செய்திருக்கின் றேன். தேயிலைப் பக்கற் ஈயத்தை உருக்கி முகங்கள் செய்திருக்கிறேன். முருக்கம் செத்தலில் குதிரை போன்ற மிருகங்கள் செய்வதும் வழக்கம். சுவாமிக்குக் கை கால்வைத்து (சாத்துப்படி செய்வது) அலங்கரிப்பதும் சப்பறங்கள் செய்வதும் வழக்கம். இதனால் என்னைச் சாத்துப்படிக் கணேஸ் என்று அன்பர்கள் அழைப்பார்கள்.

கேள்வி:- சிறுவயதிலிருந்தே தெய்வப்பணியில் ஈடுபட்டிருக்கிறீர்கள், இல்லையா?

இல்லாமல், தீபாவளியன்று நான் செய்த சூரனை எனது கிராமத்து மக்கள் அக்காலத்தில் வீதிதோறும் ஆட்டி மகிழ்வதும் உண்டு.

கேள்வி:- பள்ளி மாணவனாகபலவிதமான கலைத்துறைகளில் ஈடுபட்டதாகக் கூறினீர்கள் சிற்பக் கலைத்துறையில் ஈடுபடமுன்னர் என்ன தொழில் செய்தீர்கள்?

காசுத் தேவைக்காக மேசன் தொழிலில் ஈடுபட்டேன். இத்தொழில் மூலம் காசு கிடைத்தாலும் எனக்கு சிற்பத் துறையிலேயே ஆர்வம் இருந்தது. 1950இல் எனக்கு ஒரு நோய் வந்தது. அப்போது வீட்டில் இருந்தேன். இரண்டு ரூபாவுக்குச் சீமெந்து வாங்கி முதன்முதலாக பிள்ளையார் விக்கிரகம் ஒன்று செய்தேன். அந்தச் சிலை இப்போதும் பிரமனுட்சி தோட்ட கற்பக விநாயகர் கோவிலில் இருக்கிறது.

கேள்வி:- நீங்கள்விமானம், கோபுரம் முதலானவற்றைச் செய்வ

- சிற்பாசிரியர் கணேசமூர்த்தி கோரிக்கை



தில்லையா?

ஏன் செய்வதில்லை. அவற்றையும் செய்துதான் வருகின்றேன். 1959இல் வட்டு.மேற்கு. வீரபத்திரர் கோவில் திருத்த வேலைகளையும் வாகனத் திருத்தவேலைகள் முதலாக பல திருத்த வேலைகளையும் செய்திருக்கிறேன். ஏராளமான விமான வேலைகளைச் செய்துள்ளேன். அவற்றில் 1970இல் கட்டப்பட்ட மாவிப்பாய் விஸ்வகுல மக்களின் காளிகோயில் விமானம் 1974 இல் கட்டப்பட்ட வெற்றிலைக்கேணி பனை செல்வவிநாயகர்கோயில் துவிதள விமானம், 1987இல் கட்டப்பட்ட பிளவத்தை பிரமனுட்சி தோட்டத்து கற்பக விநாயகர் கோயில் துவிதள விமானம் குறிப்பிடத்தக்கவை. இவ்வாண்டு வட்டு.மேற்கு வீரபத்திரர் கோவில் துவிதளவிமான வேலைகளைச் செய்துகொண்டிருக்கின்றேன். 1953 இல் முதன்முதலாக பருத்தித்துறை முருகன் கோவில் கட்டடம் என்னால் கட்டப்பட்டது.

### சவால்

கேள்வி,- உங்களை இத்துறையில் ஈடுபடத் தூண்டியவர் யார் என்று சொல்லமுடியுமா?

நல்ல கேள்வி. அதிகமானவர்களை யாரோ ஒருவர் தூண்டியிருப்பார்.என்னைப்பொறுத்தவரை எனது சிலைகளைப் பார்த்து எள்ளிநகையாடி ஏளனம் செய்தவர்கள்தான் என்னை ஊக்கப் படுத்தியிருக்கிறார்கள். குறைகூறிய பொறாமைக்காரருக்குச் சவாலாகவே இத்துறையில் ஈடுபட்டு வெற்றி கண்டுள்ளேன்.

கேள்வி:- உங்களுக்கு எத்தனை பிள்ளைகள் இருக்கிறார்கள்? அவர்கள் என்ன செய்கிறார்கள்?

(6 ஆம் பக்கம் பார்க்க)

செவ்வி: என். கே. தங்கரத்தினம்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இனிமை பெய் செறிவான இலகு நடை

# பண்டிதமணி ஐயாவின் எழுத்தாற்றல்

பண்டிதமணி அவர்கள் ஐம்பத்தெட்டு ஆண்டுகளாக எழுதிக் குவித்தவை எத்தனை ஆயிரம் பக்கங்கள் என்று மதிப்பிடமுடியாது. மின்சார வெளிச்சத்தில், மின்விசிறியில் பெரிய மேசை கதிரையில்பழக்கமில்லாத அவர், மங்கி மங்கி எரியும் மண்ணெண்ணெய் விளக்கில் எழுதுவது வழக்கம். வசதியான பெரியகதிரையின் இருசட்டங்களின் மீது ஒரு பலகையையிட்டுச் சுகாசனத்திலிருந்து அவர் பக்கம் பக்கமாக எழுதுவது வழக்கம்.

பண்டிதமணி அவர்களின் எழுத்துக் காலத்தை ஆங்கிலேயர் காலமும் அதனை அடுத்த தேசிய எழுச்சிக்காலமும் என மதிப்பிடலாம். அன்றி இலக்கிய காலமும் சமய காலமும் எனவும் மதிப்பிட்டுக்கொள்ளலாம். அவர் 1926ஆம் ஆண்டளவிலேயே சுயமாக எழுத ஆரம்பித்தார். அதற்கு முன்னர் நாவலர் பாடசாலை முகாமையாளர் ஸ்ரீமத் கைலாசபிள்ளை அவர்களுக்கும், சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர் அவர்களுக்கும் எழுதிக் கொடுத்துப் பழகியதும் உண்டு.

அவர் இளமையிலேயே தகர்க்கமுடியாத தர்க்க ரீதியிற் கண்டனங்கள் எழுதிய காரணத்தைத் தமிழ்நாட்டுப் பேராசிரியர்களும் மகோபாத்தியாயர்களும் நன்கறிவர். எவருக்கும் கட்டுப்படாத ஈரப்பலாவளவு இளைஞர்களுடன் கூடி வாழ்ந்த சகவாசத்தினுல் அவருக்கு அஞ்சாமை நெஞ்சில் உறுதியாய் இடம் பெற்றிருந்தது. அவர் இளமையில் முரட்டு மாடுகளை அடக்கவும் பழகியவர். அவர் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தில் சேவை செய்யத் தொடங்கிய காலத்திலேயே ஈழகேசரிப் பொன்னையா அவர்களின் தொடர்பும் கிடைத்தது. அதனுல் அவர் ஈழகேசரிப் பத்திரிகைக்கு வாரந்தோறும் விடயதானம் செய்துவந்தார். அதன் ஆண்டு மலர்களிலும் சிறப்பு மலர்களிலும் அவரின் கட்டுரைகள் நாயகங்களாய் மலர்ந்திருந்தன.

ஈழகேசரியை அடுத்துத் தினகரனிலும், கல்லூரிகள், சங்கங்கள், சபைகளின் வெளியீடுகளிலும் அவரின் விடயங்கள் சிறப்பிடம் வகித்தன. வட இலங்கை, கிழக்கிலங்கை, தென் இலங்கை, மேற்கிலங்கை, மத்தியவிலங்கை முதலாய பிரதேசமெங்கும் அவரின் எழுத்தோவியங்களுக்குப் பெரிய வரவேற்புக் கிடைத்தது.

## பண்டிதமணி வரலாறும் காலமும்

அவர் பலவிதநடைகளில் எழுதிய அனுபவம் வாய்ந்தவர். எளிதாகவும் இறுக்கமாகவும் எழுதியவர். அவரின் வசனங்கள் பெரும்பாலும் சுருக்கமானவை. அவர் எழுதிய கட்டுரைகள், விமர்சனங்கள் பின்னெரு காலத்தில் நூல்வடிவில் வெளிவரலாம் என அவர் கனவிலும் கருதியிருக்கவில்லை. அவ்வப்போது அன்பர்கள், பழைய மாணுக்கர்கள், அபிமானிகள் கேட்கும்தோறும் அவர் எழுதியதுண்டு. சில சமயங்களில் அவர் தட்டிக் கழித்தாலும் சிலர் விடாக் கண்டர்களாய் நெருக்கவே, அவர் சிறிச் சினவாமல் எழுதிக்கொடுத்ததும் உண்டு. அவர் சூசகமாக எழுத வல்லவர்.

**சுற்றுடல்**

முதலில் நறுமணம் கமழும் மகிழமரத்தடியில் வெண்மணல் பரப்பிய முற்றத்திலிருந்து எழுதியவர். பின்னர் மல்லிகைப் பந்தரையடுத்த குளிர்மையான கொட்டிலில் சாணி மெழுகுத் திண்ணையில் மான் தோலிலிருந்து எழுதியும் வந்தார். அவர் வாழ்ந்த செம்பாட்டுச் சூழல் அவரைப் பண்பாட்டுக் கட்டுரைகள் எழுதுமாறு தூண்டிவந்தது. சைவாசிரிய கலாசாலையிலும் வெளியிலும் அவருக்குப் பெரியவர்களின் சகவாசத்தால் எழுதுவதற்குப் போதிய கருப்பொருள் மிதந்து வந்தது. நல்லஉள்ளுடன் உள்ள மோதகங்களை அவர் சமைத்தார் என்று கூறலாம்.

சிறுகதைகள், உருவகக் கதைகள், இன்ன பிறகதை வகைகளில் அவர் கைவைத்திருந்தால், சங்க நூல்களில் வரும் சங்கதிகள் யாவும் காதற் கதைகளாக வெளிவந்திருக்கும். அவர் காதற்கதைகள் எழுதவில்லை.

பண்டிதமணி அவர்களின் எழுத்தாற்றலைத் தூண்டிப் பிரகாசிக்கச் செய்தவர்களுள் ஈழகேசரி சோ. சிவபாதசுந்தரம் அவர்களும், தினகரன் வி. கே. பி. நாதன் அவர்களும், ஸ்ரீலங்கா குல. சபாநாதன் அவர்களும் குறிப்பிடத்தக்கவர்கள்.

பண்டிதமணி அவர்களின் எழுத்தின் சுவையை அறிந்தின்புறுவதற்கு, அவர் எழுதியவற்றை எங்கிருந்தும் படித்தின்புறலாம். அவர் எழுதியவை யாவும் சுவையானவை. அவர் சில சமயம் புனைபெயர்களில் மறைந்து நின்று எழுதிய போதிலும் அவரை அறிந்தவர்கள் அவர் எழுத்தின் சுவையை எளிதில் மோந்தறிந்து இன்புறுவர். பாம்பின் கால் பாம்பு அறியும்.

**வசனநடை**

அரச கரும மொழித் திணைக்களத்தை அலங்கரித்த வித்துவான் எவ். எக்ஸ். சி. நடராசா அவர்கள் பண்டிதமணி அவர்களின் எழுத்தாற்றலைப் பெரிதும் பாராட்டியதுண்டு. ''பாண்டியன் தமிழ் தென்னந்தியத் தமிழகத்தே பரவிய காலத்திலே இலக்கண வரம்பு கடந்து பன்முகஞ் செறிய அது மலையாளம், கன்னடம், தெலுங்கு என்ற மொழிகளாக மாறலாயிற்று. கடல்சூழ் யாழ்ப்பாணத்தில் ஒதுங்கிய தமிழ் புறம் புறம்திரிய வழியின்றிச் செழித்தும் அடர்ந்தும் வளரலாயிற்று. இவ் வண்ணம் செந்தமிழ் வளர்ச்சியடைய வழிவகை வகுத்துவைத்த பெருமை நாவலர் பரம்பரைக்கே உரியது. நாவலர் பாரம்பரியம் இப்பொழுது பண்டிதமணி யவர்களில் தங்கிநிற்கிறது. நாவலர் வசனநடைகவைந்தவர். தமிழ்வசன நடைக்கு ஆலம் விதை போன்றதோர் வித்தினை

**க. சி. குலரத்தினம்**

இட்டார். இந்த வித்து ஈண்டி வளர்ந்து பெருவிருட்சமாக அதனைத் தாங்க ஒரு பொதுவிழுது போல் பண்டிதமணி அவர்கள் திகழ்கின்றார்கள்.''

''பண்டிதமணி அவர்களின் வசனநடை பார்ப்பார், அரசர் இவர்களின் நடையை ஒத்திருக்கும். பேராசிரியர் உரைநடையிற் கண்டதன்மைகள், இவர் வசனநடையிற் காண்டல்கூடும். இவர் தமக்கெனத் தனிச்சிறப்புவாய்ந்த ஒரு வசனநடையை ஆட்சிப்படுத்திக்கொண்டார். இவ் வாட்சிப்பெலன் பேசும்பொழுதும் எழுதும்பொழுதும் நிலைத்து நின்று தமிழ் ஒளிபரப்பும்''

''சொற்கள் சொட்டுச் சொட்டாகவரும்; பொட்டுப் பொட்டாகவும் வரும். திலகமிட்ட நுதல் பொலிந்து பேரழகுடன் விளங்குதல் போல் பண்டிதமணி அவர்களின் வசனநடையும் துலங்கும். சொட்டுச் சொட்டான சொற்களினூடே பொட்டுமிட்டுப்பொடியுமிட்டு வைப்பார். ஊடுருவி வாசித்தால் உண்மை விளங்கும்''

''பண்டிதமணி அவர்கள் உள்ளதை உள்ளவாறே எடுத்துரைக்குஞ் சொற்களை ஏற்றவிடத்துப் பொறித்துத் தெற்றென விளங்கவைக்கும் ஆற்றலிற் கைதேர்ந்தவர். அவர் ஒரு பாடலில் வரும் ஏதாவது ஒரு சொல்லிலே வைத்து முழுப்பாடலையும் புலப்படுத்துவர்.''

''இனி பண்டிதமணி அவர்களின் பரந்துபட்ட சமுத்திரம் ஏனைய எழுத்துக்களில் மாதிரிக்காக மக்கள் இலக்கியங்களிலொன்றுய பள்ளுப் பிரபந்த வாழ்வை அவர் சித்திரிக்கும் பந்தியொன்றிற் படித்தறியலாம்:-

''ஆண்டே! அந்த எடுபிடிகாரியின் மாயவலையில் அவன் சிக்கிக்கொண்டான். கட்டின மாடு கட்டினதுதான்; அவிழ்த்தது அவிழ்த்ததுதான். அவன் அந்தப் பக்கமே போவதில்லை. பழைய தாரம் என்று என்னையும் சேரான். என்னைத்தானே மறந்து விட்டான். சட்டைக்காரியை விட்டுப் பிரியான். சதா அவள் குடிலிலே தான் இருக்கிறுன், எடுப்புச் சோற்றுக்கும் கள்ளுக்குந்தான் ஆண்டேயின் நெல்லுத் தொலைகிறது.''

பண்டிதமணி அவர்கள் மெத்தக்கடினமான விடயங்களை மிகவிலகுவாக்கி எழுதவல்லவர். அவர் இறுக்கமாக வடிகட்டிச் சுருக்கமாக எழுதவும் வல்லவர். தமிழ்நாட்டார் வெளியிட்ட கலைக்களஞ்சியத்தில் பண்டிதமணி அவர்கள் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களைப் பற்றி எழுதியமை இறுக்கமான ஸ்படிகம் போன்றது.

பண்டிதமணி அவர்கள் ஆற அமர்ந்து நூல் வடிவில் எழுதியமைகுறைவு. அவர் பெரும்பாலும் கட்டுரை வடிவிலேயே எழுதியவர். அக்கட்டுரைகளில் ஒரு சில நூல் வடிவில் வெளிவந்துள்ளன. அவை இலக்கிய வழி, ஆறுமுகநாவலர், பாரத நவமணிகள், கந்தபுராண போதனை, கந்தபுராண கலாசாரம், கம்பராமாயணக் காட்சிகள், சமயக் கட்டுரைகள், சிந்தனைக்களஞ்சியம், அன்பினைந்திணை, அத்வைதம் என்பனவும் பிறவுமாம்.

இவற்றைவிட அவர் நூற்றுக் கணக்கான நூல்களுக்கு எழுதியுதவிய அணிந்துரைகள் அருமையான நுழைவாயில்கள்போல அவ்வவ் நூல்களை முகஞ் செய்வன. இன்னும் காரைக் காலம்மையார், கீதையும் துறவும், பாரதக்கதைகள், கட்டுரைத் தொகுதிகள் முதலியனவும் ஏராளமாகவுள்ளன.

பண்டிதமணி அவர்கள் யாழ்ப்பாணத்துப் பாரம்பரிய உரையாசிரியர் வழியில்வந்தவர். அந்த வரப்பிரசாத மகிமையும்சேர அவர் திருவருட் பயனுக்கு அகலவுரை எழுதியுள்ளார். அதைவிட அவர் கந்தபுராணத்தில் தக்ஷகாண்டப் பகுதிக்குப் பாரிய உரையெழுதிப் பேராதனைப் பல்கலைக்கழகத்தார் மூலம் வெளியிட்டுள்ளார்.

(முற்றும்)

## எழுதும் பணி தொடரட்டும்....

ஈழத்தின் தமிழ் மணியாக விளங்கிய பண்டிதமணி திரு. சி. கணபதிப்பிள்ளை அவர்களைப்பற்றிய தொடர் கட்டுரை இத்துடன் முற்றுப்பெறுகிறது.

பண்டிதமணி அவர்களின் வரலாற்றையும் அவர் வாழ்ந்த காலத்தையும் எழுதி ஈழத்தின் சென்ற தலைமுறையின் தமிழ், சமய வளர்ச்சிகளை புதிய தலைமுறையினருக்கு அறிமுகம் செய்த பெருமை பல்கலைப்புலவர் க.சி. குலரத்தினம் அவர்களைச் சாரும்.

பல்கலைப்புலவர் க.சி. குலரத்தினம் அவர்கள் ஈழத்தின் தலைசிறந்த எழுத்தாளர். தமிழ், சமயம், வரலாறு, அரசியல் உட்பட-பலதுறைகள் சம்பந்தமாகவும் நிறைய எழுதியவர். எழுபது வயதான அவர் இளைஞருக்கு உரிய உற்சாகத்துடனும், உத்வேகத்துடனும் இப்பொழுதும் எழுதிக் கொண்டிருக்கிறுர்.

அவர் ஆசிரியராக இருந்த காலத்தில் பல பாடநூல்களை ஆக்கித் தமது சொந்தத்தில் வெளியிட்டவர். பின்னர் அரசாங்கக் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தில் பாட நூலாசிரியராகப் பணிபுரிந்து ஓய்வுபெற்றார். ஈழத்தில் வெளிவந்த, வெளிவரும் பல பத்திரிகைகள் சஞ்சிகைகளில் எழுதிய மூத்த எழுத்தாளரான பல்கலைப் புலவர் க. சி. குலரத்



க. சி.குலரந்தினம்

தினம் பயிற்றப்பட்ட ஆசிரியர். சென்னை சைவ சித்தாந்த சமாஜத்தின் சைவப்புலவர்; சென்னைப் பல்கலை... முக பீ.ஓ.எல். பட்டதாரி.

எழுத்துப் பணியைப் பெரும் சமூகப் பணியாக விரித்துப்பல துறைகள் குறித்தும் பல அரிய விடயங்களை அவர் இப்போதைய தலைமுறையினருக்குத் தொடர்ந்தும் வழங்குவாராகுக.

—பிரதம ஆசிரியர்

## இடத்திற்கு ஏற்ற பண்பு!

காட்டில் ஒரு மரத்தில் ஒரு பெண் கிளி வசித்துவந்தது. அதற்கு இரண்டு குஞ்சுகள் இருந்தன.

ஒருநாள் தாய்க்கிளி வெளியே சென்றிருந்த சமயம் அந்தப் பக்கம் வந்த வேடன் ஒருவன் இரண்டு கிளிக்குஞ்சுகளைப் பிடித்து ஒரு கூண்டில் அடைத்து எடுத்துச் சென்றுவிட்டான்.

போகும் வழியில் ஒரு குஞ்சு கூண்டிலிருந்து நழுவிக் கீழே விழுந்துவிட்டது.

வேடன் அதைக் கவனிக்காமல் போய்விட்டான்.

கீழே விழுந்த கிளிக்குஞ்சை ஒரு முனிவர் எடுத்து வளர்த்தார். மற்றெரு கிளிக்குஞ்சை வேடன் தன் வீட்டுக்கு எடுத்துச் சென்று வளர்த்து வந்தான்.

சில காலத்திற்குப் பிறகு அந்தக் காட்டுக்கு வேட்டையாடவந்த ஒரு மன்னன் வழி தவறித் தன் குதிரைமீதுஅமர்ந்தவாறு வேடன் குடிசை இருந்த பக்கமாக வந்துவிட்டான்.

அவனைக் கண்டவேடன் வீட்டுக்கிளி, ''ஐயா, யாரோ ஒரு திருடன் குதிரைமீது வருகிறுன். அவனைப் பிடித்துக் கட்டுங்கள்—கொல்லுங்கள் என்று கூச்சலிட்டது.

அந்தக் கூச்சலைக் கேட்டு அச்சமடைந்த அரசன் குதிரையை வேகமாகச் செலுத்தியவாறு அவ்விடத்தை விட்டகன்று முனிவரின் ஆசிரமம் இருக்குமிடத்திற்கு வந்தான்.

மன்னனைக் கண்ட முனிவரின் கிளி, ''மன்னரே, வாருங்கள் வாருங்கள். தயவுசெய்து அமருங்கள்களைப் பாறுங்கள். போதுமான அளவு உணவும் நீரும் இங்கு உள்ளது. உண்டு பசியாறுங்கள். முனிவர் அருகாமையில்தான் சென்றிருக்கிறுர். விரைவில் திரும்பிவிடுவார்'' என மரியாதையுடன் கூறிற்று.

அந்த இரண்டு கிளிகளுக்கு இடையே இருந்த பண்பு வித்தியாசத்தைக் கண்டு மன்னன் வியப்படைந்தான்.

அது குறித்துக் கிளியிடமே விசாரித்தான்.

தங்கள் வரலாற்றை மன்னனுக்கு எடுத்தியம்பிய கிளி ''என் சகோதரியான கிளி வேடனிடம் வளர்ந்ததால் அந்தச் சூழ்நிலைக்கேற்ற பண்பு அமைந்திருக்கின்றது. நான் முனிவரின் ஆசிரமத்தில் வளர்ந்ததால் உயர்ந்த பண்பினைப் பெற்றிருக்கிறேன்'' என்று கூறியது.

நன்றி:
பஞ் தந்திரக்கதை

## முயன்று பாருங்கள்

யாழ்ப்பாணத்து வியாபாரி ஒருவர் இரண்டு சாக்குகளில் தேங்காய்களைக் கட்டி, புகைவண்டி மூலம் கொழும்புக்குக் கொண்டு செல்கிறுர். ஒவ்வொரு சாக்கிலும் 50 காய்களாக மொத்தம் 100 காய்களை எடுத்துச் செல்கிறுர். ஒரு சாக்கில் 50 காய்கள் மட்டும் தான் போடலாம்.

யாழ்ப்பாண புகையிரத நிலையத்திலிருந்து கொழும்புவரை 50 நிலையங்களில் வண்டியை நிற்பாட்ட வேண்டியுள்ளது. ஒவ்வொரு நிலையத்திலும் புகையிரத நிலைய அதிபருக்கு ஒரு சாக்கிற்கு ஒரு காய் வீதம் இவ்விரண்டு காய்களாக, புகைவண்டி நிலைய அதிபர்களுக்குக் கொடுக்கிறுர்.

இப்படி அவர் கொடுத்துக் கொண்டு போய் கொழும்பை அடைந்ததும் அவரிடம் தேங்காய்கள் இருக்குமா? இல்லையா? மிச்சமாக இருந்தால் எத்தனை காய்கள் இருக்கும்? இது சிந்தனைக்கு விருந்து.

விடை:அடுத்த இதழில்




### மூலகம் கண்டுபிடித்தவர்கள்


| | |
|---|---|
| ஐதரசன் | ஹென்றிக் வெண்டிஸ் |
| ஈலியம் | வில்லியம் ராம்சே |
| இலத்தியம் | ஒகஸ்ட ஆர்பீர்ட்ஸன் |
| பெரிலியம் | நிக்லஸ் லூயிஸ் வன்கியூலின் |
| போரன் | லூஸக், ஐகஸ் கெனுட் |
| நைதரசன் | தானியல் ரதர்போட் |
| ஒட்சிசன் | பிரீஸ்ட்லி |
| குளோரின் | கார்ல்வில் |
| புளோரின் | ஹென்றி மொய்ச்சான் |
| சோடியம் | ஹம்பரிடேவி |
| கல்சியம் | '' |
| மக்னீசியம் | யோசப் பிளக் |
| அலுமினியம் | ஹன்ஸ் கிறிஸ்டியன் |
| சிலிக்கன் | யோன் யேக்கப் பர்சிலியஸ் |
| பொசுபரசு | ஹெனிங் பிராண்ட் |

ஆ: சர்வேஸ்வரன்
(மானிப்பாய் இந்துக் கல்லூரி)

### சின்னமாமா தந்த சிறிய பந்து

அம்மா அப்பா பாடம்
அம்மா சொல்லித் தந்தாளே
சின்னஞ்சிறுமி என் தலையில்
சிறிதும் ஏற வில்லையே
சின்ன மாமா கொண்டுவந்த
சிறிய பந்து கண்ணிலே
மின்னல் போலத் துள்ளிவந்து
கொள்ளை இன்பம் தந்ததே.
சின்ன மாமா எறிந்துவிட்ட
சின்னப்பந்தைப் பிடிக்கவே
அம்மா கோபம் கொண்டெனக்கு
அடியும் உதையும் தந்தாளே.

திருமதி. துரையம்மா நடேசரத்தினம்




### உருளைக்கிழங்கு மஸ்கற்

**தேவையான பொருட்கள்:**

½கிலோ உருளைக் கிழங்கு
¼கிலோ சினி
1கப் நீர்
1தே.க. ஏலப்பவுடர்
25 முந்திரிகைப்பருப்பு
1 மேசைக் கரண்டி நெய் அல்லது பட்டர்.

**செய்முறை:**

உருளைக்கிழங்கை நன்கு அவித்து மசித்துக் கொள்ளவும். பின்பு சீனியையும் நீரையும் ஒரு பாத்திரத்திலிட்டு காய்ச்சவும். பாணி தடித்ததும் பாத்திரத்தை இறக்கி அத்துடன் மசிக்கப்பட்ட உருளைக்கிழங்கைச் சேர்க்கவும். நன்கு கலக்கவும். பின்பு திரும்பவும் அடுப்பில்வைத்து கிண்டவும் தூளாக்கப்பட்ட முந்திரிகைப்பருப்பு, நிறம், வாசனைப்பொருட்கள் என்பவற்றைச் சேர்க்கவும். கலவை தடித்ததும் பட்டர் பூசப்பட்ட தட்டில் கொட்டிப்பரவி துண்டங்களாக்கவும்.

**குறிப்பு:**

இரு நிறம்கொண்ட மஸ்கற் தயாரிக்க விரும்பின் அரைப்பங்கை முதலில் தயாரித்து ஒருநிறம் இட்டு தட்டில் பரவவும். பின்பு மறுபங்கைத் தயாரித்து வேறெரு நிறமிட்டு முன்பு பரவியதன் மீதே திரும்பவும் கொட்டிப் பரவவும். பின்பு வெட்டும்போது இரு நிறம் கொண்டதாக அமையும்.

### மங்கையர் வாழ்வு சிறக்க---

பெண்ணே நீ எப்படி வாழவேண்டும்?

எல்லோருடனும் இன்முகத்துடனும், புன்னகையுடன் வாழ்வாயானுல் குடும்பத்தில் எந்தவொரு பிரச்சினையும் எழமாட்டாது.

எதற்கெடுத்தாலும் முற்கோபப்படாமல் பொறுமையாய் நடந்தால் அதுவே உன் வாழ்வின் ஏற்றத்திற்கு வழி கோலும்.

ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்கும் பழக்கத்தை நீ கடைப்பிடிக்க வேண்டும்.

என்னதான் இடர் வந்தாலும், வருங்காலச் சந்ததியினரின் வளமான வாழ்வு உன் கையில் தான் என்ற உண்மையை மறந்து விடாதே.

எந்த ஒரு பிரச்சினைக்குரிய விஷயத்தையும் பெரிதுபடுத்தாமல் சமாளிக்க வேண்டும்.

குறைந்த பேச்சையும், அதிகளவு மௌனத்தையும் நீ கடைப்பிடிப்பாயானுல் உன் வாழ்வு சீரும் சிறப்பும் மிக்கதாக விளங்கும்.

வாழ்க்கையில் எத்தனையோ ஏற்றத்தாழ்வுகள் ஏற்படலாம். அதனை வெளிக்காட்டாது, சகித்து வாழக்கூடிய பெண்ணுக உன்னை நீ மாற்றிக்கொள்ள வேண்டும்.

உள்ளத்திலே நேர்மை, பேச்சிலே தெளிவு, துன்பத்திலே சகிப்பு இவைகளே வாழ்க்கையை சோலைமயமாக்கும்.

எனவே பெண்களாகிய நாம் நமது வாழ்க்கையை நல்ல முறையில் அமைப்பதிலேயே மகிழ்ச்சி தங்கியுள்ளது.

- ஜெயா ஞானசுந்தரம் -

### பீற்றூட் மஸ்கற்

**தேவையான பொருள்கள்**

½ கிலோ பீற்றூட்
½ கிலோ சீனி
¾ கப் நீர்
நெய் அல்லது பட்டர்
வனிலா அல்லது ஏலம்

**செய்முறை:**

பீற்றூட்டை தோலை நீக்கிக் கழுவிய பின்பு மெல்லிய துருவல்களாக்கவும். பின்பு சீனி, நீர், துருவலாக்கிய கிழங்கு என்பவற்றை சேர்த்து அடுப்பில் வைத்து காய்ச்சவும். வனிலா அல்லது ஏலத்தையும் இட்டு பாத்திரத்தில் ஒட்டாத பதம் வந்ததும் பட்டர் பூசிய தட்டில் கொட்டிப்பரவி துண்டங்களாக்கவும்.

**குறிப்பு:-**

பீற்றூட் சிலவேளை நிறம் மங்கலடையும். எனவே சிவப்புக் கலரிங் விரும்பின் சேர்க்கவும். இதே அளவுகள் செய்முறையின் படி கரட் கிழங்கிலும் மஸ்கற் செய்து கொள்ளலாம்.

வசுமதி
முத்துக்குமாரசுவாமி

### முட்டை கிளையாஸ்

Sheux Porty

**தேவையான பொருள்கள்:**

கோதுமைமா - 4 அவுன்ஸ்
உப்பு - சிறிதளவு
சீனி - 2 மட்டமாக தேக்கரண்டி
முட்டை - 4
மாஜரின் - 4 அவுன்ஸ்
தண்ணீர் - ½ பைந் அல்லது 1½ கப்

**செய்முறை:**

மாவையும் உப்புத்தூளையும் ஒன்றுக சேர்த்து அரிக்கவும், மாஜரீனை நீர், சீனி இட்டு மாவையும் அதில் இடவும். (அடுப்பில் வைத்து)பின்பு அடுப்பில் இருந்து இறக்கி நன்ருக அக்கலவையை அடிக்கவும். பாத்திரத்தின் கரையில் ஒட்டுப்படாமல் நன்ருக அடித்து மெல்லிய சூடாக ஆறவிட்டு, முட்டையை இட்டு அடிக்கவும். கலவை தடித்து மினு மினுப்பாக வரும் வரை அடிக்கவும். கேக் ஐசிங் அச்சில் இட்டு நீண்ட துண்டுகளாக இட்டு வேக வைக்கவும். (Bake பண்ணவும்)

✶ மீரா ✶

✶ ✶ ✶

### சிரியுங்கள்

கன்று:- அம்மா நீ எனக்குப் பால் தராமல் வீட்டுக்காரருக்கு கொடுக்கிறியே அவர்கள் எவ்வளவு நன்றி கெட்டவர்கள்?

தாய்ப்பசு:- ஏன் அப்படிச்சொல்லுகிறுய்.அவை தானே இரை தாறது.

கன்று:- இரை தருவது பாலுக்காக, ஆனுல் பதுங்குகுழி தங்களுக்கு மட்டும்தான் வெட்டி வைச்சிருக்கினம்.

பொன்.
அம்பிகைபாகன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சந்தை சென்ற கணவன்

அன்றைய சந்தை விலைகளை விசாரித்த எனக்கு மிகுந்த ஏமாற்றமாகப் போய்விட்டது. வெங்காயம், பச்சை மிளகாய், கத்தரிக்காய், மரவள்ளிக்கிழங்கு எல்லாமே நெருப்புவிலையாக இருந்தது. அந்த

> 'இது அழுகல், அது சூத்தை...... உங்களை நன்றாக ஏமாற்றி விட்டார்கள்......!'
> இதுதான் சந்தைக்குச் சயிக்கிள் மிதிக்கும் கணவன்மார்களுக்கு மனைவிமார் வழங்கக்கூடிய வரவேற்புரைகளா?

விலைக்கு அவைகளை வாங்கிக்கொண்டு போனால் நிச்சயம் மனைவியிடம் வேண்டிக்கட்ட வேண்டியதுதான்.

இப்பொழுது எல்லாம் சந்தைச் சாமான்களும் கட்டுப்பாட்டு விலைகளில்தான் விற்கிறார்கள் என்று சொன்னால் அவளுக்கு அதெல்லாம் எங்கே விளங்கப் போகிறது.

'உங்களுக்குச் சாமான்கள் வாங்கத் தெரியாது. கேட்ட விலைக்குக் காசை அள்ளிக் கொடுக்கத்தான் தெரியும். உப்படி என்றால் மூலைக்கடை மணியத்திடமே வாங்கி இருக்கலாமே. மினைக்கெட்டு ஏன் இவ்வளவு தூரம் சயிக்கிள் மிதிக்க வேண்டும்?' என்பாள்.

மனைவியின் வார்த்தைதான் ஒரு கணவனுக்கு அமிர்தம் என்பார்கள். அவளுடைய ஒரு பாராட்டுக்கு இந்த உலகத்திலே எதுவும் ஈடாகாது என்பார்கள். ஆனால் அந்தப் பாராட்டுக்களைத் தொடர்ந்து வழங்கக் கூடாது என்பதில் அவர்கள் ஏன்தான் அவ்வளவு கண்டிப்பாக இருக்கிறார்களோ தெரியவில்லை. நாமும் சந்தைக்குப் போய்வந்து எப்போதாவது 'அதைப்' பெற்றால் தான் உண்டு.

இந்தப் பெண்கள் இருக்கிறார்களே, அவர்கள் தங்களுக்கொரு புடைவையோ நகையோ வேண்டுமானால் அதற்குத் தாங்கள் தான் கடைக்குப்போய்ப் பார்த்து வாங்க வேண்டும் என்பார்கள்; அல்லது தாங்களும் கூட வர வேண்டும் என்பார்கள். எங்களுடைய 'தெரிவு' தங்களுக்குச் சரிவராது என்பார்கள். ஆனால் சந்தைக்குப் போவதற்கு மட்டும் அவர்களுக்குக் கேவலம் இந்த ஆண்கள் தான் கிடைத்தார்களா? சந்தைக்குப் போவதை மட்டும் அவர்கள் ஏன் அப்படிக் கேவலமாக எண்ண வேண்டும்? சமையல் என்பது எப்படிப் பெண்களுக்குரிய கலையாக விளங்குகிறதோ, அதேபோல சமையல் சாமான்கள்வாங்குவதும் அவர்களுடைய கடமையாக இருப்பதுதானே நியாயம்?

சரி, நாங்கள்தான் அவர்களுக்காக - அவர்களுடைய பாராட்டுக்காக 'எதையுமே' செய்யச் சித்தமாக இருக்கிறோமே. அவர்கள் அதையாவது புரிந்துகொண்டு- அந்த நன்றிக்காக நாலு நல்ல வார்த்தைகள் சொல்லக் கூடாதா? 'இது அழுகல், அது சூத்தை... உங்களை நன்றாக ஏமாற்றிவிட்டார்கள்...'இதுதான்சந்தைக்குச் சயிக்கிள் மிதிக்கும் கணவன்மார்களுக்கு அவர்கள் வழங்கக்கூடிய வரவேற்புரைகளா?

சந்தை விலைகளை அவதானித்த எனக்கு அருமையான ஓர் ஐடியா தோன்றியது. இப்படி எனக்குத் தோன்றும் ஐடியாக்களுக்கு மட்டும் குறைவில்லை. எல்லாமே அவளுக்காகத்தான், அவளுடைய பாராட்டுக் கிடைக்க வேண்டும் என்பதற்காகத்தான். பாராட்டு ஏன், பழிப்புரையிலிருந்து தப்பினால்

**நகைச்சுவை**

போதாதா?

நான் எனது கைச்செலவுகளுக்காக மறைவாக வைத்திருக்கும் பணத்திலிருந்து சில ரூபாய்களை எடுப்பது மனைவி தந்த பணத்தோடு அதையும் சேர்த்துச் சாமான்களை வாங்கி, அவளுக்குப் பத்து இருபது வீத கழிவு விலையில் கணக்குக் கொடுப்பது— இதுதான் என் ஐடியா. இதனால் நான் இழப்பது சில ரூபாய்கள் எனினும் பெறுவதோ அதைவிடப் பெரியதும் எளிதில் கிடைக்க முடியாததுமான மனைவியின் பாராட்டு... எப்படி ஐயா என் ஐடியா?

எனது திட்டத்தால் 'கெட்டிக்காரன் - கொள்ளை மலிவில் வாங்கியிருக்கிறீர்கள்' என்று பாராட்ட என் மனைவிக்கு ஒருவேளை தாராள மனசு வராவிட்டாலும் 'பிழையில்லாமல் வாங்கியிருக்கிறீர்கள்' என்ற நடுத்தரப் பாராட்டாவது கிடைக்கும் என்பது எனது நம்பிக்கை.

மனையாளிடம் சந்தைச் சாமான்களையும் கணக்கையும் ஒப்படைத் (6ஆம் பக்கம் பார்க்க)

--பொ. சண்முகநாதன்--

# கவிதைக் கதம்பம்

## ஹெலியே! ஹெலியே!

ஹெலியே ஹெலியே சலியாயோ
கொலை செய்வதிலே சலியாயோ
மலிவான உன் கொலையாலே
பலியானோர் தான் பலபேரே.

வழியாலே தான் போவோரும்
கிலியோடே தான் போகின்றார்
ஹெலியே நீ செய் கொலையாலே
மரணம் அடைந்தோர் பலபேரே.

—''தமிழ்மணி''

## இந்திய நேசம்

உள்ளம் உருகுதைய்யா – ராஜீவ்
உன் செயல் காண்கையிலே
அள்ளி எடுத்துவிட்டோம் - இங்கு
அகதிகள் பெருகுதைய்யா.

பயம் இன்றி வானைப்
பார்த்திடத் தோணுதைய்யா
அகதிகள் படகேறி - நாம்
ஓடி வருவோம் ஐயா

பாசம் அகன்றதைய்யா - சிறிலங்காவின்
பாசம் அகன்றதைய்யா - உந்தன்
நேசம் வளர்ந்ததைய்யா -
எம்மண் துயர் மறைந்ததப்பா.

- மாவை கனகராசா

## கண்ணாடி போன்ற மனம்

கண்ணாடி போட்டொருவன் பார்த்தபோதும்
கண்ணின்றி அவன் காண முடியாதன்றோ
கண்ணாடி மஞ்சள் நிறம் ஆனபோதும்
காமாலை வந்தவன்தான் காணும் போதும்
மண்ணோடி வருகின்ற காட்சியெங்கும்
மாறுபட்ட நிறமாகத் தெரியுமென்பார்
கண்ணாடி போன்றமனம் கவலையாலே
கடிதுடைந்து துகளானால் வாழ்வே நாசம்.

பொன்னான வாழ்வுதனைப் போட்டுடைத்து
பொழுதெல்லாம் பொருமியென்ன-
பயனேயாகும்
சின்னாளே வாழ்கின்றோ மென்ற எண்ணம்
சிந்தனையை ஊடுருவிப் பாயுமானால்
மன்னாள்வார் எல்லாரும் மடிந்தே போனார்
மற்றுயார் மடியாமல் இருப்பாரிங்கே
நன்னாளாம் இன்று தொட்டே நாமெல்லாம்
நல்லவராய் வாழ்வதற்கே நலன்கள்-
சேர்ப்போம்.

- சிங்கையாழியான்

## சீதனப் பிசாசு

என் மகளின் அழகிற்கும்
என் பண பலத்திற்கும்
ஏற்ற பொடியனை நான் எடுப்பன்
காணி, பூமி, நகை, நட்டு, காசு, கார்
குறையில்லாமல் கொடுத்தெடுக்க
என்னால் ஏலும்
எனச் சொல்வோர் இருக்கும் வரை
என்ரை பொடியன் டாக்குத்தர்
என்ரை பொடியன் என்ஜினியர்
ஏலத்தில் எடுக்க எத்தனை பேர் போட்டி
ஆர் கூடத்தாறனோ அவன்தான்
என் மகனின் மாமன்
எனச் சொல்பவர்கள் இருக்கும் வரை
சீதனப் பிசாசு சீருடன் வாழும்.

- சிலம்பு

# தமிழ்த்தாயின் சீரிளமை

அயராத புத்தெழுச்சியும் கனவுகளும் துடிப்பும் பதைப்புமாய் புவிவாழ் மாந்தரிடத்தே எத்தனை எத்தனை இதய தாபங்கள்!

அத்தனை இதயக் குமுறல்களுடன் மனோரதங்களுடன் நேச பாசச் சுமையுடனே காலப்பறவையானது விரைகின்றது.

நம் அறிவாற்றலுக்கமையா விந்தை அமைப்பும் பிரபஞ்சரகஸ்யமுமாய் ஒரு சுண்டைக்காய் பருமனில் ஈர்ப்பு வசியத்தே சிக்கி யுக யுகாந்தரமாய் கல்ப கோடி ஆண்டுகளாய் ஓர் அண்டவெளி மாயப் பிண்டமதாய் நின்றுசுழலும் இப்புவிகோளத்தை இம்மட்டு ஜீவபூமியாக்கி நிழல் கவித்து அங்கங்கு அமைதியின் இறகுகளைச் சொரிந்து அது பறந்தோடிப் போய்க் கொண்டே இருக்கிறது!

கண்ணனின் குழலிசை இன்பம் ராதைக்கும் மற்றும் அவன் ஆயர் பாடித் தோழர் தோழியருக்கும் மட்டும்தானா? எங்கெங்கோ வனவனாந்தரங்களில் கடின தவ நிஷ்டையில் ஆழ்ந்துவிட்ட மகரிஷிகளுக்கும் முனி சிரேஷ்டர்களுக்கும் மாத்திரம்தானா அந்த சுருளமுதகீதம்?

உடலும் உள்ளமும் நலிவுற்று உணர்வுகள் ஒடுங்கி... எழுச்சியே உறங்கிப்போய் படுக்கையாய் வீழ்ந்துவிட்ட அப்படி ஓர் அபாக்கிய ஜீவனுக்கும் ஜீவகீதமாக அதுஅருளப்பெற்றதாம்.

ராதையும் கோதையும் முனிவரும் தேவரும் மற்றுமுள உலக ஜீவராசிகளும் வேணுகான இன்னிசையிலே கிறங்கி அவனைச் சூழ்ந்து ஆடிநிற்க, அந்த மாயக்கண்ணனு துன்பவேதனையில் நொந்து முனகும் சிறுமனைக் கட்டிலைச் சுற்றிச் சுற்றி வந்து பண்ணிசைத்து படுக்கையாய் முடங்கிப்போனதொரு சிறுவனை மகிழ்வித்து தானும் மகிழ்ந்தானும்.

பல்லுயிரும் பலவுலகும் படைத்தருளியும் அழித்தொழித்தும் பிரபஞ்ச நியதிகாத்து என்றுமுள ஓரே பரம்பொருளாக நிலைபெற்று, நவமான எழிலும் நவம் நவமான உயிர்ப்புணர்வும் எழுச்சியும் அருளி நம்மை ஆண்டு நிற்கும் தமிழ்தாயின் சீரிளமைத் திறன்வியந்து வாழ்த்திடுவோம். நாளும் தலைதாழ்த்தி வணங்கிடுவோம்.

(மனிதமாடு நூலின் 4ஆவது அறிமுக விழாவில் ஆற்றிய உரையின் தொகுப்பு) ★

--அ. செ. முருகானந்தன்--

# பெண்களின் மூளை சிறிது

''ஆண்களின் மூளையைவிடப் பெண்களின் மூளை சிறியது''

காதலில் தோல்வியுற்ற ஒருவர் இப்படிச் சொல்லவில்லை.

ஆயிரக்கணக்கான மண்டைகளைத் திறந்து பார்த்துஆராய்ந்தறிந்து பார்புகழ் படைத்தவரான டாக்டர். பி. ராமமூர்த்திதான் இப்படித் தெரிவித்தார்.

ஆண்மூளையின் சராசரி எடையை விடப் பெண் மூளையின் எடை பத்துக் கிறாம் குறைவாம்.

மூளை அவர்களுக்குச் சிறியதாக இருந்தாலும் ஆண்களைவிடச் சிறந்த அறிவாளிகள் பெண்களிடையே இருப்பது இயற்கை என்ற அப்பட்டமான உண்மையையும் அவர் எடுத்துச் சொன்னார்.

எனவே மூளையின் அளவுக்கும் அறிவின் தரத்திற்கும் சம்பந்தமில்லை என்பது அவரது கருத்தாகும்.

ஒரு சாதாரண மூளையில் 50 கோடி முதல் 80 கோடிவரை செல்கள் உள்ளன. நாம் உட்கொள்ளும் பிராணவாயுவில் மூன்றில் ஒரு பகுதியை மூளை மட்டும் எடுத்துக் கொண்டு விடுகிறது. கஷ்டமான கணக்குப்போடுவது போன்ற ஆழ்ந்த சிந்தனையில் ஈடுபட்டிருக்கும் பொழுது 60 சத விகிதம் பிராண வாயுவைக் கூட அது உபயோகிக்கின்றது.

கைகளோ கால்களோ சதா நடுங்கிக் கொண்டிருக்கச் செய்யும் ''ஷேக்கிங் பால்ஸி'' என்ற நோய், மூளையில் ஒரு பகுதி கெட்டுப் போவதால் ஏற்படுகிறது. ஒரு நீண்ட ஊசியை மூளைக்குள் செலுத்தி கெட்டுப் போன பகுதியை மின்சாரத்தால் அழித்து விடுவதன் மூலம் அந்த நோயைக் குணப்படுத்தலாம்.

நிதானமிழத்தல், அடங்காப்பிடாரித்தனம், பலாத்காரமனப்பான்மை முதலியவற்றையும் மூளை ஆப்ரேஷன் மூலம் குணப்படுத்த முடியும்.

ஆனால் அறிவுக் குறைவான ஒருவரின் அறிவை ஆப்ரேஷன் மூலம் பெருக்கமுடியாது.

செயற்கை இருதயம் பொருத்தப்படும் அற்புதத்தைக் கண்டோம். ஆனால் செயற்கை மூளை பொருத்துவதை இப்போதைக்கு நாம் எதிர்பார்க்க முடியாது. ★

--சி. சித்ரா--

# சிவபுராணம் கூறும் பரிணாம வளர்ச்சி

உலகம் உருவான காலம் முதல் அது அசைந்து கொண்டே இயங்குகின்றது. இந்த இயக்கம் உயிர் வாழ்வதற்கு இன்றியமையாதது. எமது நாடி துடிப்பதும், பூமி சுழல்வதும், அணு அசைவதும் இந்த ஆட்டத்தாலேயே. இந்த ஆட்டம் நிற்பின், எல்லாமே தரைமட்டம். ஆட்டம் இயற்கையின் திட்டம். இருளிலிருந்து ஒளிமயமான வாழ்வைத் தந்த இயற்கையாம் இறைவன் ஆடுகின்றான். இதனையே, ''நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே'' என்றும் ''தில்லையுள் கூத்தனே'' என்றும் இறைவனை இறைஞ்சுகின்றார் மாணிக்கவாசகர்.

**காரணகாரியம்**

அன்றுதொட்டு இன்றுவரை காரணகாரியம் (Cause and Effect) கொண்டே, இயற்கை இயங்கி வருகின்றது. ஒரு நிகழ்வுக்கு வேறொன்று காரணமாய் இருக்க வேண்டும். இங்ஙனம், காரணம் ஒன்று இருந்தே ஆகவேண்டும் என்பது பெறப்படும். இதை, ஆற்றல்(சக்தி - Power)என்று விஞ்ஞானிகள் விளம்புவர். இதனைத் தமது சிவபுராணத்தில் ''தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்'' என்று மணிவாசகர் அரண் செய்கின்றார்.

ஆட்டத்தால் ஒலியும், ஒளியும் பிறப்பது இயல்பே. ''வெய்யாய், இயமானனும் விமலா'' என்று வெப்பத்தையும் (Heat) விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய விளங்குஒளியாய்''என்று ஒளியையும் (Light) ''உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற மெய்யா''என்று ஒலியை

**சமயம்**

யும் (Sound) எடுத்துக் காட்டினார் திருவாதவூரடிகள். வெப்பம், ஒளி, ஒலி பௌதிக இயலின் அடிப்படைக் கோட்பாடுகள்.

பூமியில் பிறக்கும் உயிர்கள் அனைத்தும் மாறுபட்டும் வேறுபட்டும் கூறுபட்டன. இவை வெவ்வேறு பிறவிகளை, வெவ்வேறு இடங்களிலும், காலங்களிலும் எடுப்பன. தாயின் கருவில் உயிர் வளர்ச்சியைப் பெறுவதுபோன்றே இது பல பிறவிகளில் மாற்றம் பெறுகின்றது.

இதைப்பரிணாமவளர்ச்சி (கூர்தல், Evolution) என்று டாவின் (Darwin) விஞ்ஞானம் விளக்கும். இதையே மெய்ஞ்ஞானக் கூற்றாக சிவபுராணம் புல்லாகிப் பூடாய், புழுவாய், மரமாகிப் பல் விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக் கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய், பல் அசுரராகி முனிவராய்த் தேவராய்ச் செல்லாநின்ற இத் தாவர சங்கமத்துள்,எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்'' என்று பாடுகிறார்.

**அறிவு**

அறிவுக்கு மூன்று வகைப் பரிமாணங்கள் உண்டென்று, உளநூல் உரைக்கும். இவை ஆழம், அகலம், நுண்மை ஆகும். இவற்றை, இறைவனுக்காக்கி,'ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே'' என்று சிவபுராணம் விளக்குகின்றது. இதே தத்துவத்தைத்தான், வேலும் தாங்கி நிற்கின்றது.

உலகை ஆக்கிக் காத்து, அழித்துத் தொழிற்படுவதற்கு ஒரு தனி ஆற்றல் இருக்கவே வேண்டும். இதை விஞ்ஞான மொழியில், — Creation, Protection Conservation - என்று கூறலாம். இம்முத்தொழில்களையும் இறைவன் மேலேற்றி முறையே ''ஆக்குவாய், காப்பாய், அழிப்பாய்'' என்று திருவாசகம் என்னும் தேன் தந்த அருள்வாசகர் அருளினார். ★

க. கயிலாயநாதன்

# காலில் காயமா?

## ஏற்புத் தடை ஊசி போடுங்கள்

**வைத்திய சஞ்சீவி**

காலில்காயம்பட்டுவிட்டதா?

உடலையும் உள்ளத்தையும் அணு அணுவாக வதைத்து உயிரைப் போக்கடிக்கும் ஏற்புவலி நோயிலிருந்து உங்களைக் காப்பாற்ற ஏற்புத்தடை ஊசி (Tetanus Toxoid) போட வேண்டும் என்று தவிக்கிறீர்களா?

ஒவ்வொருமுறை காயம்பட்டவுடனும், அதிலும் முக்கியமாகக் கறள் பிடித்த இரும்பால் ஏற்பட்ட காயங்களுக்கு இவை ஏற்றப்பட வேண்டும் எனப் பலரும் நம்புகிறார்கள்.

கறள் மூலம் ஏற்புவலி நோய் ஏற்படுவதில்லை. ஏற்புக் கிருமிகள் செறிந்திருக்கும் பொருள்களாகிய சாணம், மலம், எச்சில், அழுக்கு, மண் போன்றவற்றால் காயங்கள் அசுத்தப்பட்டால் ஏற்புநோய் உண்டாகும் அபாயம் உண்டு.

எனவே இவற்றிற்கு ஏற்புவலித் தடை ஊசி கட்டாயம் போட வேண்டும்.

எனினும் ஏற்கனவே ஏற்புவலித்தடை ஊசிகள் முறையாகப் போடப்பட்டிருந்தால் காயங்கள் ஏற்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஏற்புவலித் தடை ஊசி போடுவது தேவையற்றது; ஏன் சிலவேளைகளில் கேடுவிளைவிக்கவும் கூடும்.

ஏற்புவலித் தடைஊசி என்பது ஒருமுறை மாத்திரம் ஏற்றினால் போதுமானதல்ல!

காயம்பட்டவுடன் முதல் ஊசியும், அது ஏற்றப்பட்ட 4 — 6 வாரத்தின் பின் இரண்டாவது ஊசியும் 4—6 மாதத்தின் பின் மூன்றாவது ஊசியும் போடவேண்டும்.

இந்த மூன்று ஊசிகளும் முறையாகப் போடப்பட்டால், ஐந்து முதல் பத்து வருடங்களுக்கு ஏற்புவலி ஏற்படாமல் எதிர்க்கும் சக்தி உடலுக்குக் கிடைக்கும்.

ஆயினும் உடலுக்குக் கிடைக்கும் இந்த ஏற்புவலிக்கு எதிரான எதிர்ப்புச்சக்தி, கால ஓட்டத்தில் குறைந்துவிடாதிருக்க பத்து வருடங்களுக்கு ஒரு தடவை ஊக்குவிப்பு ஊசி போடப்பட வேண்டும். பத்து வருடத்திற்கு ஒருமுறை போடப்படும் ஏற்புவலித் தடை ஊக்குவிப்பு ஊசி புதிய காயங்கள் ஏற்படாவிட்டாற் கூடப் போடப்பட வேண்டும்.

ஆயினும் புதிய காயங்கள் ஏற்பட்டால் அதிலும் முக்கியமாக ஏற்புவலி நோய் ஏற்படக்கூடிய சாத்தியக்கூறுள்ள காயங்கள் ஏற்பட்டால் ஐந்து வருட காலத்திலேயே ஊக்குவிப்பு ஊசி போடப்படவேண்டும்.

**காயங்களின் வகைகள்**

ஏற்புவலி நோய் ஏற்படக்கூடிய சாத்தியக் கூறுள்ள காயங்கள் வருமாறு:-

காயம் ஏற்பட்ட பின் ஆறு மணித்தியாலங்கள்வரை துப்புரவு செய்யவோ, மருந்து கட்டாமலோ விடப்பட்டவை.

★ சிராய்ப்புகள், தசை பிதுங்கிய காயங்கள்.

★ 1 ச. மீ. க்குக்கூடிய ஆழமான சாயங்கள்.

★ குண்டுவெடி, ஷெல் வெடி, துப்பாக்கி ரவைக் காயங்கள், கடுமையான சிதைவுடன் கூடிய காயங்கள், எரிகாயங்கள்.

★ சிழ்பிடித்த காயங்கள்.

★ இரத்த ஓட்டம் தடைப்பட்டதால் தசை அழுகலுடன் கூடிய காயங்கள்.

★ அழுக்கு, மண், தூசி, சாணம், மலம், எச்சில் ஆகியவற்றால் அழுக்கடைந்த காயங்கள்.

இப்படிப்பட்ட காயங்களுக்கு உடனடியாக ஏற்புவலித் தடை ஊசி போடவேண்டும். ஏற்கனவே முறையாக மூன்று ஏற்புவலித் தடை ஊசிகள் போடப்பட்டு ஐந்து வருடம் கழிந்து விட்டால் ஊக்குவிப்பு ஊசி போடவேண்டும். ஐந்து வருடம் ஆகவில்லை என்ன் ஊக்குவிப்பு ஊசி கூடப் போடவேண்டியதில்லை.

(நன்றி: ஊற்று)

டாக்டர். எம். கே. முருகானந்தம்

# மலையாள எழுத்தாளர் மறவாத சம்பவம்

தகழி சிவசங்கர பிள்ளை பிரபல மலையாள எழுத்தாளர்.

ஆலப்புழையில் அவர் வசித்துவருகின்றார்.

அவரின் வீட்டின் பெயர் 'சங்கரமங்கலம்'

ஞானபீட பரிசுபெற்ற அவரைத் தமிழ் வாசகர்களுக்கும் நன்குதெரியும், 'செம்மீன்' திரைப்படம் மூலம்.

கடந்த மாதம் 24ஆம் திகதி தகழியின் வாழ்விலே மறக்க முடியாத ஒரு நாளாக அமைந்து விட்டது.

அழையா விருந்தாளி அவருக்கு மன உளைச்சலைக் கொடுத்துவிட்டான்.

ஜன்னல் ஊடாக நுழைந்த அந்த விருந்தாளி தகழியின் படிப்பு அறைக்குள் நேரே சென்றான்.

பார்க்கர் பேனாவை எடுத்துக்கொண்டான். மலையாள இலக்கியங்களுக்கு மெருகூட்டிய பேனா அது. பின்னர் வெண்கலத்தினாலான கிருஷ்ணர் சிலையை எடுத்துக்கொண்டான்.

இச்சிலை குருவாயூர் மக்களால் அன்பளிக்கப் பட்டது.

[illegible] 'காதா' என்று [illegible] மனைவியின் அறைக்குள் சென்றான் அவ்விருந்தாளி.

தங்கத்தினாலான மாங்கல்யச் சங்கிலியை மனைவியின் கழுத்திலிருந்து விருந்தாளி இழுத்தான்.

ஆனால்'காதா'எழுந்து கதறத்தொடங்கினார்.

தகழி மற்ற அறையில் இருந்து உதவிக்கு ஓடுவதற்கு முன்னர் இருளோடு இருளாக விருந்தாளி மறைந்து விட்டான்.

இரவு நிகழ்ச்சி தகழியை வெகுவாகப் பாதித்துவிட்டது.

'என்னை ஏன் அவன் தெரிவு செய்தான்?'— விஷயத்தை அறிந்து தன்னைச் சந்திக்க வந்தவர்களைப் பார்த்து 'தகழி' இக்கேள்வியைத் தான் எழுப்பினார்.

'அந்த முட்டாள் தனது அருமையான ஓர் இரவை வீணாக்கி விட்டானே, பிச்சைக்காரனை என் வீட்டிற்குள் நுழைந்து'—

இனந்தெரியாத அந்த விருந்தாளியை தகழி சிவசங்கரப்பிள்ளை இப்படி கண்டித்தார்.

பொலீஸார் இச்சம்பவம் குறித்து வழக்கு ஒன் [illegible] விட்டு அவ் 'விருந்தாளி' [illegible] அலைகின்றனர். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் நூலகத்தை நாடாவிடில் நூலகம் மக்களை நாடவேண்டும்

உலகின் சனத்தொகையில் மூன்றில் ஒரு பங்கு கிராமங்களிலேயே உள்ளனர். நகரங்கள், கிராமங்களிலேயே உணவு முதலியனவுக்குத் தங்கியுள்ளன. அவ்வகையில் நோக்குமிடத்து கிராமங்கள் பொருளாதார ரீதியில் வளர்ச்சி அடையத்தக்கதாக அறிவு பெறும் பொருட்டு நூலகசேவை கூடியளவு கிராமங்களை நோக்கியே நகர்த்தப்படல் வேண்டும்.

யாழ்ப்பாண மாவட்டத்துக்குரிய புள்ளி விவரங்களை உதாரணத்துக்காக எடுத்துக் கொள்வோம். 1981ஆம்ஆண்டு மேற் கொள்ளப்பட்ட குடிசன மதிப்பீட்டின் அடிப்படையில் பத்து வயதுக்கு மேற்பட்டவர்களில் யாழ்ப்பாண மாவட்டத்துக்குள் உள்ளவர்களது எண்ணிக்கை 6, 31, 245 ஆகும். இதில் 2, 09, 889 பேர் நகரங்களை அண்டியும் 4, 21, 356 பேர் கிராமங்களை அண்டியும் வாழ்கின்றனர். இந்தச் சனத்தொகையில் நகரத்தில் உள்ளவர்களில்96சதவீதமானோர் (2,015,07பேர்) எழுத்தறிவுள்ளவர்களாகவும் 4 சதவீதமானோர் (8, 382 பேர்) எழுத்தறிவற்றவர்களாகவும் காணப்படுகின்றனர். கிராமத்தை அண்டி வாழ்பவர்களில் 92 . 1 சதவீதமானோர் (3, 88, 076 பேர்) எழுத்தறிவுடையோராகவும் 7 . 9 சதவீதமானோர் (33, 280 பேர்) எழுத்தறிவற்றவர்களாகவும் காணப்படுகின்றனர்.

நகரத்தின் சனத்தொகை வீதத்துடன் ஒப்பிடுகையில் கிராமங்களை அண்டி வாழ்பவர்களின் எழுத்தறிவின்மை வீதாசாரம் இரு மடங்காகக் காணப்படுவது அவதானிக்கப்படல் வேண்டும். அடிப்படைக் கல்வி வசதிகள் கிராமங்களை நோக்கி நகரும் இவ்வேளையில் முறைசாராக் கல்வி முறைகளையும் அவ்வாறே கிராமங்களை நோக்கி நகர்த்தல் அவசியம். அவ்வகையில் கிராம நூலகங்களில் பங்களிப்பு இன்றைய காலசட்டத்தில் மிகவும் இன்றியமையாததாகும். நூலகம் ஒரு திறந்த பல்கலைக்கழகம் என்பர். எவர்க்கும் அங்கு அறிவைப் பெற்றுக்கொள்ள வசதி ஏற்படுத்தித் தரல் வேண்டும். இன்று கிராம - நகர மக்களிடையே காணப்படும் பொருளாதார; அறிவு ரீதியான ஏற்றத் தாழ்வுகளின் அடிப்படையும் எழுத்தறிவின்மையே யாகும். கிராம நூலக இயக்கத்தின் மூலம் இத்தகைய எழுத்தறிவின்மையைப் பூண்டோடு ஒழித்துவிட முடியும்.

தற்கால கிராம - நகர அமைப்பில் பெரும்பான்மையான தனவந்தர்களும், அறிஞர்களும் நகரை அண்டியே வாழ்கின்றனர். அவர்கள் பிறந்து வளர்ந்த கிராமங்களில் கிடைக்கும் செல்வங்களைத் தமது நுகர்வின் பொருட்டு, கிராமங்களிலிருந்து நகரத்தை நோக்கிக் கொண்டு செல்கின்றனர். கிராமத்தில் கல்வி பயின்ற ஒருவர் உயர் கல்விக்காக நகரை நாடுகின்றூர். அவரது உயர் கல்வி நகரச் சூழலில் மேற்கொள்ளப்படுவதால் பின்னர் கல்வியை முடித்த பின் அவரால் மீண்டும் தன் கிராம வாழ்வுக்குத் திரும்ப முடிவதில்லை. அதனுல் அவர் நகரச் சூழலிலேயே வசதிகளுக்காகத் தங்கி விடுகின்றூர். மீண்டும் தன் கிராமத்துக்கு வந்து சேவையாற்ற அவர் விரும்புவதில்லை. இதன் காரணமாக நகரங்களில் சனத்தொகை அதிகரிக்கின்றது. குறுகிய நிலப் பரப்பில் கூடிய சனத்தொகை காணப்படுகின்றது. கிராமங்களில் சனத்தொகை நில விகிதாசாரத்தின் அடிப்படையில் நோக்குமிடத்து ஐதாகவே காணப்படுகின்றது.

கிராமங்களில் பொது நூலகங்களுக்கிடையே இடைவெளி அதிகமாகக் காணப்படுவதன் காரணமாக ஒரு நூலகத்தின் சுற்றுடலில் வாழும் மக்களே அதன் வாசகர்களாக இருக்கின்றனர். சற்றுத் தொலைவில் உள்ளவர்களில் வாசிக்கும் ஆர்வம் உள்ளவர்களே இந்த நூலகத்தை நாடி வருகின்றனர். அத்தகையவர்களிலும் பெரும்பான்மையோர் அருகாமையில் உள்ள கிராம நூலகத்தை விடத் தொலைவில் உள்ள நகரை அண்டிய பெரிய நூலகத்தை நாடவே விரும்புகின்றூர்கள்.

நூலகங்களை மக்கள் நாட முற்படாத வேளை, நூலகங்கள் மக்களை நாடி நகர வேண்டும் என்ற சிந்தனை படிப்படியாக இன்று எமது கிராமங்களில் வளர்ந்து வருகின்றது. இதன் காரணமாகவே ஏற்கனவே இருந்து வந்த நூலகங்களுக்கான இடைவெளியைக் குறைக்கும் நோக்குடனும், அதிகளவு மக்களுக்குப் பயனளிக்கும் வகையிலும் கிராம நூலக இயக்கம் பற்றிய சிந்தனை வளர்ந்து வருகின்றது. அண்மைக் காலங்களில் பத்திரிகைகளில் காணப்படும் தகவல்களைக் கண்ணுறுமிடத்து கிராமங்கள் தோறும் நாளாந்தம் புதிய நூலகம் அமைக்கப்படுவதாகவோ, பழைய நூலகம் புனரமைக்கப்படுவதாகவோ நூலக வாரம் கொண்டாடப்படுவதாகவோ செய்திகள் வருவதனை அவதானிக்கலாம். இது மகிழ்வுக்குரிய தொரு மாற்றமாகும்.

கிராமங்களிலிருந்து தொழில் வாய்ப்புகளுக்காக அயல் நாடு செல்பவர்களின் எண்ணிக்கை முன்னெப்போதுமில்லாதவாறு இன்று அதிகரித்து வருகின்றன. தன் மகன் சென்ற நாட்டைப் பற்றிய தகவலைப் பெற ஒரு அன்னை முயல்வது இயல்பே. வெளிநாடு சென்ற கிராமத்தவர் நாள்தோறும் எழுதும் கடிதங்களுள் பல புதுத் தகவல்கள் புதைந்து கிடக்கும். இவை யாவற்றையும் விளங்கிக் கொள்ளும் ஆர்வம் காரணமாக இன்று நூலகங்களை நாடி மக்கள் நகரத் தொடங்கி இருக்கிறூர்கள்.

இச்சந்தர்ப்பத்தில் நூலகத்துக்கும், வாசிகசாலைக்கும் இடையே உள்ள சில வேறுபாடுகளை விளக்க வேண்டியதும் அவசியமாகின்றது. கிராமிய வழக்கில் 'நூலகம்' என்ற பதம் 'வாசிகசாலை'களையே குறிப்பிடுகின்றனது. வாசிகசாலை ஒன்றில் கிராம மக்களினால் உவந்தளிக்குப்படும் அன்றைய புதினப் பத்திரிகைகள் வைக்கப்பட்டிருக்கும்; ஊரவர்கள் சுதந்திரமாக அன்றாடச் செய்திகளை வாசிப்பதற்கேற்ப வாசிகசாலையானது சனசமூக நிலையங்களிலோ கிராம அபிவிருத்திச் சங்கங்களிலோ தனியார் பொதுக் கட்டடங்களிலோ இயங்கும். சில முன்னேறிய வாசிகசாலைகளில் ஒரு சில சஞ்சிகைகளும் மேலதிகமாகக் காணப்படும். நாம் இக்கட்டுரையில் குறிப்பிடும் 'நூலகம்' என்பது 'வாசிகசாலை' அன்று. வாசிகசாலையை நூலகத்தின் பல சேவைகளில் ஒன்றுகவே கருதப்படல் வேண்டும்.

★ என். செல்வராஜா ★

நன்றி: நூலகவியல் ★

## சந்தைக்குப் போன...

(5ம்பக்கத் தொடர்ச்சி)

தேன். 'கெட்டிக்காரன்-கொள்ளை மலிவில் வாங்கியிருக்கிறீர்கள்' என்றுள். பாஸ் மாக்ஸை எதிர்பார்த்தவனுக்கு கிறடிற்ரே கிடைத்துவிட்டது போலிருந்தது. எனக்குப் பெருமை பிடிபடவில்லை.

ஒருவேளை கிண்டல் செய்கிறுளோ என்ற எண்ணத்தில் அவளின் முகத்தைக் கூர்ந்து கவனித்தேன். அவள் தொடர்ந்துசொன்னுள். 'இண்டைக்குச் சந்தையில்எல்லாமே நெருப்பு விலைஎன்று மூலைக்கடையில் யானைவிலை குதிரை விலைவிற்கிறூர்கள். உங்களுக்கு எப்படி இந்த விலையில் கிடைத்தது?'

'சந்தையிலும் எல்லாம் நெருப்பு விலைதான்' என்ற நான் தொடர்ந்து ஒரு மர்மத்தை வெளியிடுவது போலச் சொன்னேன் 'வியாபாரிகள் எல்லோரும் எனக்குத் தெரிந்தவர்கள். எனக்கென்று தான் ஸ்பெஷலாக அந்த விலைக்குத் தந்தார்கள்.'

'அதுதானே பார்த்தேன்' என்ற அவளுக்கும் ஒரு ஐடியா தோன்றியிருக்க வேண்டும். அவளுக்கும் அடிக்கடி ஐடியாக்கள் தோன்றுவதற்குக் குறைவில்லை- என்ன இருந்தாலும் அவளும் என் மனைவிதானே.

'தயவுசெய்து பஞ்சியைப் பாராமல் இன்னும் இதேயளவு மரக்கறி வகைகள் வாங்கி வாருங்கள். வேறை யாரும் போவினம் கொடுத்துவிட்டு வாங்கலாம் என்றுல் அவர்களுக்கு உங்களைப்போல செட்டித்தனம் வராது. தம்பையா செத்ததுக்கு நாங்கள் இன்னும் அவை வீட்டுக்கு ஒன்றும் செய்து கொடுக்கயில்லை... அந்தியேட்டியும் வரப்போகுது... மரக்கறி மலிவாய் இருக்கிறதாலை இண்டைக்கே அதைச் செய்து குடுத்திடுவம்... என்ன யோசிக்கிறியள்... இந்தாருங்கோ உரப்பை... சயிக்கிளிலை கட்டிக் கொண்டு போங்கோ...'

அவள் என்னை மிகவும் பெருமைப்படுத்தி விட்டாள். அவள் என்றுமே இல்லாத அளவுக்கு அன்று என்னைப் பாராட்டி விட்டாள். ஆனல் அதற்கு நான் கொடுத்த விலையைக் கேட்டீர்களானுல் மலைத்துப் போவீர்கள். மொத்தத்தில் அது ஒரு பற்றுக்குறை பட்ஜெட். ★

## கத்தோலிக்க...

(3ம்பக்கத் தொடர்ச்சி)

லிக்க மதப் பரம்பல் ஆகியன விவரிக்கப்படுகின்றன. தொடர்ந்து ஒல்லாந்தர் வருகையும் அவர்கள் வருகையால் கத்தோலிக்க மதத்தினருக்கு ஏற்பட்ட இன்னல்களும் கூறப்படுகின்றன. கவிஞர் தேவதாசன் தன் காவியத்துக்குத் தேர்ந்தெடுத்துள்ள பொருள் முன்னூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட நிகழ்வுகளையும் இக்கால நிகழ்வுகளையும் ஒருங்கு சேர நோக்கக்கூடிய பொருத்தப்பாடுடையதாகும்.

ஆசிரியர் 1987 இல் நின்று கொண்டு தான் 1687 ஐப் பார்க்கிறூர் எனலாம். ★

## சிற்பக்கலைக்கு...

(3ஆம் பக்க தொடர்ச்சி)

எனக்கு அதில் குறைச்சல் இல்லை. 6ஆண்பிள்ளைகளும் 2 பெண்பிள்ளைகளுமாக மொத்தம் 8 பிள்ளைகள் உள்ளனர்.

கேள்வி;- இவ்வளவு குடும்ப பாரமுள்ள நீங்கள் சந்தோஷமாக இத்தொழிலைச் செய்கிறீர்களா?

சங்கீத ஆசிரியர் ஒருவரின் மகளான என் மனைவி 'மகிழ்மணி' இருக்கும்போது எனக்கென்ன குறை. நான் சிலைகளை வீட்டில் வைத்துச் செய்யும்போது என் மனைவி அவற்றைப் பார்த்து குறைநிறை சொல்லி எனக்கு ஊக்கம் தருவார். மனைவியாரின் ஒத்துழைப்பு என்னை இவ்வளவுக்கு உயர்த்தியுள்ளது.

**சிடர்கள் இல்லை**

கேள்வி:- இத்தொழிலுக்கு உங்களுக்கு குரு இல்லை என்கிறீர்கள். உங்களுக்கு சிஷ்யர்கள் இருக்கிறூர்களா?

கேட்க வேண்டிய கேள்வி. எங்கே 50சதம் கூடிய சம்பளம் தருகிறூர்கள் அங்கே போவோம் என்ற கருத்துடைய தொழிலாளர்கள் தான் இன்று உள்ளனர். பொறுமையோடு இருந்து இத்தொழிலைக் கற்றுக்கொள்ள ஒருவரும் முன்வருகிறூர்கள் இல்லை. இன்றைய இளைஞர்களுக்கு இத்துறையில் ஆர்வமும் இல்லை. இதனுல் இத்துறை ஒரு காலத்தில்அருகிவிடுமோ என்ற கவலையும் எனக்குண்டு. இத்துறைக்கு ஊக்கமளிக்கவேண்டுமானுல் பல்கலைக்கழகத்தில் இதற்கு ஒருபிரிவு ஆரம்பிக்கப்படவேண்டும். பட்டதாரிகளுக்கு ஒத்த தராதரம் வழங்கப்படவேண்டும்.

கேள்வி:- சிற்பக் கலையைத் தொழிலாகக் கொண்டுள்ளவர்களுக்கு நீங்கள் கூறும் புத்திமதிகள்என்ன?

சிற்பக் கலையைத் தொழிலாக கொண்டவர்களது வாழ்க்கை பெரும்பாலும் சிறப்படையாது என்று சிலர் கூறுவது வழக்கம். இக்கூற்றுத்தவறுனது.

இத்துறையில் ஈடுபடுபவர்கள் கடவுள் பக்தி நிறைந்தவர்களாக - நல்லொழுக்கமுள்ளவர்களாக - சைவ ஆசார சீலர்களாக - நேர்மையானவர்களாக வாழ வேண்டும் அப்படி வாழ்பவர்களது வாழ்க்கை நிச்சயமாகச் சிறப்படையும் என்பது எனது நம்பிக்கை. இத்தொழிலில் ஈடுபடுவோர் பணம் சம்பாதிப்பதை நோக்கமாகக்கொள்ளாது கடவுளுக்குப் பணிசெய்ய வாய்ப்புக் கிடைத்ததே அதுவே போதும் என்ற மனநிறைவோடு செயலாற்றினுல் நிச்சயம் அருள் கிடைக்கும். ★

# யூரியா பதனிட்ட வைக்கோல் மாடுகளுக்குச்சிறந்த சத்துணவு

யாழ்ப்பாணம் ஒரு வரண்ட பிரதேசம். மழைக்காலம் மூன்று மாதங்களே. வரட்சி மிகுந்த ஏனைய காலங்களில் இப்பிரதேச மக்கள் தம் கால்நடைகளுக்குப் பச்சைத் தீன் போடுவது மிகக்குறைவு. வைக்கோலே இக்காலத்தில் கால் நடைகளின் பிரதான உணவாகிறது.

வைக்கோலில் புரதச் சத்துக் குறைவு. ஆகையால் புரதம் நிறைந்த பிண்ணுக்கை அதனுடன் கொடுக்க வேண்டி ஏற்படுகிறது. பச்சைப்புல் உண்ணும் காலங்களில் பிண்ணுக்கு அவசியமில்லை. பிண்ணுக்கின் விலை அதிகரித்துள்ள இன்றைய காலத்தில் வைக்கோலுடன் யூரியாவைக் கலந்து மாடுகளுக்குக் கொடுப்பதன் மூலம் பிண்ணுக்கில் இருக்கும் போஷாக்குத் தன்மையை மாடுகளுக்கு வழங்கலாம்.

எந்தச் சந்தர்ப்பத்திலும்நான்கு மாதத்திற்குட்பட்ட கன்றுக்குட்டிகளுக்கு இவ்வுணவு வழங்கப்படக் கூடாது.

### வைக்கோல் பதனிடுதல்

புல்லில் உள்ள சத்துப் பொருள்களுடன் ஒப்பிடும்போது வைக்கோலில் புரதச்சத்து, விற்றமின் 'ஏ' குறைவாக காணப்படுகின்றன. வைக்கோல் ஒரு சக்தி தரும் உணவாக மட்டுமே கருதப்படுகிறது, யூரியா பரிகரிப்பின் மூலம் வைக்கோல் இலகுவாக செமிபாடடைகிறது. சத்துள்ள உணவாகவும் மாற்றமடைகிறது.

யூரியா பரிகரிப்பினை இரண்டு முறைகளில் செய்து கொள்ளலாம். ஒன்று - ஒவ்வொரு நாளும் பதனிடும் முறை. மற்றது நீண்டநாளுக்குப் பதனிடும் முறை.

### ஒவ்வொருநாளும் பதனிடும் முறை

யூரியாவை மாடுகளுக்குத் தனி உணவாகக் கொடுத்தால் அது விஷமாகும். எனவே வைக்கோலுடன் யூரியாவைக் கலப்பதில் ஒரு அளவும் முறையும் பேணப்பட வேண்டும்.

> வைக்கோல் யூரியா பரிகரிப்பின் மூலம் அதன் போஷாக்கினை அதிகரிப்பது பற்றி யாழ். கால்நடை வளர்ப்போர் சங்கச் சுன்னுகக்கிளை ஒழுங்கு செய்த செயல்முறை விளக்கம் பற்றிய தொகுப்பு இது.

இதன்படி ஒரு கிலோ கிராம் நிறையுள்ள வைக்கோலுக்கு 18 கிரும் யூரியாவை (யானை மார்க் தீப்பெட்டியின் உள்பெட்டியில் மட்டமாக நன்கு நிரப்பப்பட்ட யூரியா 18 கிரும்க்கு அளவாகும்.) ஒரு லிட்டர் நீரில் கரைத்து வைக்கோல் மீது நன்கு தெளித்தபின் உணவாகக் கொடுக்கலாம்.

ஒரு நாளைக்கு ஒரு பசுவுக்குத் தேவையான அளவு வைக்கோலைத் தெரிந்து கொண்டபின் அதற்கு அளவான யூரியா, நீர் ஆகியவற்றை மேற்கூறிய அளவுப் பிரமாணம் தீர்மானித்துக் கொள்ளலாம்.

முதலில் நிலத்தின் மீது பொலித்தீன் சீலை அல்லது உரப்பை ஒன்றை விரித்து அதன் மீது அளவான வைக்கோலைப் பரவ வேண்டும். கணித்தெடுக்கப்பட்ட யூரியாவை குறித்தளவு நீரில் கரைத்து அக்கரைசலின் பாதியை முதலில் வைக்கோலில் தெளிக்க வேண்டும். சில நிமிடம் ஊறவிட்ட பின் வைக்கோலைப் புரட்டிப் போட்டு, மீதியுள்ள யூரியாக் கரைசலையும் தெளிக்க வேண்டும. அதன்பின் அதனை மாடுகளுக்கு உண்ணக் கொடுக்கலாம்.

யூரியாவின் நிறை மாறுபடாமல் இருப்பதற்குப் பாவிக்கப்படும் யூரியாவில் கட்டிகள் இல்லாமல் பார்த்துக் கொள்வது அவசியம். ஒரு மாட்டுக்குத் தேவையான கலவையை ஒரு நாளைக்கு ஒன்று அல்லது இரண்டு தடவைகள் பதனிட்டுக் கொடுக்கலாம். வைக்கோலுடன் யூரியா கலப்பின் கறவைகளுக்குச் சமிபாட்டுத் தன்மை அதிகரிக்கும். புரதச்சத்தும் அதிகரிக்கும்.

பதனிடப்பட்ட வைக்கோலுடன் தவிடு, சிறிதளவுபுல் அல்லது பச்சை உணவு, கனிப்பொருள் கலவை (பெக்குற்றீன் பவுடர் போன்றன) ஆகியன கட்டாயமாகக் கலந்து கொடுக்கப்பட வேண்டும். இவை மாடுகளுக்குத் தேவையான நிறைவுணவை வழங்குகின்றன.

### நீண்ட நாட்களுக்கு பதனிடும் முறை

மூன்று - நான்கு கிழமைகளுக்கு வேண்டிய வைக்கோலை இம்முறையில் பதனிட்டு வைத்தல் எளிது. கூடிய காலத்துக்கு வேண்டிய வைக்கோலையும் பதனிட்டு வைக்கலாம். அப்படிச் செய்வதனுல் — ஒன்று - நைதரசின் அளவு பதனிடப்பட்ட வைக்கோலில் படிப்படியாகக் குறைந்து போய்விடும்- இரண்டு - பெரிய கும்பலாக வைக்கோலை விடும்போது கும்பலின் மேல் பகுதியில் அமோனியா அளவு கூடியும் கீழ்ப் பகுதியில் குறைந்தும் காணப்படும். எனவே ஒரு மாதகாலம் பதனிடும் முறை சிறப்புடையது.

இம்முறையில் 100 கி. கி. வைக்கோலை பதனிட 6. கி. கி. யூரியாவும் 100 லிட்டர் நீரும் பயன்படுத்தப்படும். 350 கி. கி. நிறையுள்ள ஒரு பசு ஒரு நாளைக்கு 8கி. கி. வைக்கோல் உண்ணுமாயின் ஒரு மாதத்திற்கு அதற்கு சுமார் 250 கி. கி. வைக்கோல் தேவை. எனவே 250 கி. கி. வைக்கோலுக்கு 15. கி. கி. யூரியாவை 250 லிட்டர் நீரில் கலந்து பதனிடுதல் வேண்டும்.

**தொகுப்பு: வி. பி. சர்மா**

### பதனிடுதல்

முதலில் 250 கி. கி. வைக்கோலை 50 கி. கி. கற்றைகளாகப் பிரித்து ஒவ்வொரு 50 கி. கி. வைக்கோலையும் 50 லிட்டர் நீரில் 3 கி. கி. யூரியா கலந்து பாவிக்கலாம்.

சீமந்து தரையில் அல்லது பொலித்தீன் சீலையில் வைக்கோலைப் பரப்பவேண்டும். பொலித்தீன் சீலையில் விளிம்பை சிறிது உயர்த்தி, வேறு வைக்கோலை அதனுள்சொருகி ஒரு பேசின் போலச் செய்து கொண்டு வைக்கோலைப் பரப்பினுல் கலவை வீண் போகாது.

50 கி. கி. வைக்கோலை அதில் நன்கு பரப்பிய பின் 40 லிட்டர் நீரை முதலில் வைக்கோல் நனையுமாறு நன்கு தெளிக்க வேண்டும். இதற்கு பூ வாளியைப் பயன்படுத்தலாம். மீதி 10 லீட்டர் நீரில் 3. கி.கி யூரியாவைக் கரைத்து வைக்கோல் பூராவும் நன்கு படும்படியாக தெளிக்கவேண்டும். இவ்வாறே 250 கி. கி. வைக்கோலையும் ஒவ்வொரு 50 கி. கி. படைகளாக்கி ஒன்றன் மீது ஒன்றுகக் குவித்து கலவையைத் தெளிக்கவேண்டும், வைக்கோல் படை உயரும் போது விஸ்திரணத்தைக் குறைத்து கும்பலாகச் செய்து கொள்ளலாம்.


முழுவதும் நிரப்பப்பட்டபின் வேறொரு பொலித்தீன் சீலையால் அதனை முற்றுக மூடிவிட வேண்டும். பாதுகாப்புக்காக இரண்டு சீலைகளையும் இணைத்து ஒருபெட்டி போல ஆக்கிக் கொள்ளலாம். வெயில் இல்லாத இடங்களில் வைத்தே பதனிடுதல் அவசியம். அல்லாவிடின் பதனிட்ட வைக்கோல் மீது கிடுகு ஓலை கொண்டு மூடி வெயில் பிடிக்காதாவறு செய்து கொள்ள வேண்டும். மூன்று - நான்கு கிழமைகளுக்குப் பின் இதனை உணவாக உண்ணக்கொடுக்கலாம். மூடி வைக்கப்பட்ட குப்பலில் ஒரு மூலைப்பகுதியைத் திறந்துஅன்றன்றைக்குத்

(7ஆம் பக்கம் பார்க்க)



## சொற்சிலம்பம்

### போட்டி இல. 69



**இடமிருந்து வலம்**

1. ஒரு பறவை, 3. ஆரம்பம், 6. வல்லோன், 9. ஓர் அவயவம், 11. ஸாம்பியா நாட்டுத்தலை நகர், 12. இயற்கையாகவே உருவாகுவது, 14. முத்தமிழில் ஒன்று, 15. சேர், 16. ஒரு மிருகம், 17. பெருக்கு, 18. திருவடித்துகள், 19. நம்பிக்கை, 20. சிறை வைக்கப்படுபவன்,

**மேலிருந்து கீழ்**

1. யுத்த நேரத்திலும் நற்பணி புரிபவர்களின் சங்கம், 2. கம்பியூட்டரின் தமிழ்ப் பெயர், 4 வலிமை, 5. வானம், 7. இரணியகசிபு பெற்ற வரம். தலைகீழாய்க் கிடக்கிறது, 8. அரசியல் கட்சிகள் அடிக்கடி நடத்துவது, 10. இறுதி எழுத்து சேர்ந்து விட்டால் தென்னையில் இருந்து கிடைப்பது வந்துவிடும், 12. நறுமணம், 13. ஒரு கிரகம், 15. இராஜ்ஜியம், 16. பல வசதிகளும் கொண்ட பெரிய வீடு, 17. தாபமடை, 18. மற்றவர் மீது நாம் வைப்பது. ஆனல் இறுதி இழந்து விட்டது.

**சொற்சிலம்பம் போட்டி இல. 67 விடைகள்**

**இடமிருந்து வலம்**

1. வரதட்சணை, 4. கோ, 6. சித்திரை, 8. கடுப (பகடு), 10. ரசிகன், 12. யுகம், 14. மனிதர், 15. தலை, 16. பலகை, 17. திறம் 18. பத, 19. அரிவை, 20. கரம்.

**மேலிருந்து கீழ்**

1. வச்சிராயுதம், 2. தந்திரம், 3. சரி, 5. நடு 7. ரைசி(சிரை), 8. கன்னிகை, 9. பதார்த்தம் 11. கமலம், 13. கலை, 16. பறவை, 17. திரி, 18. பர.

**சொற்சிலம்பம் போட்டி இல. 67 பரிசு பெற்றவர்கள் விவரம்**

முதலாம் பரிசு:- திரு. த. செல்வராசா, 3, நகரசபை விடுதி, கண்டி வீதி, வவுனயா.

இரண்டாம் பரிசு:- செல்வி லதாஎினி சிவராமலிங்கம் ''ஞானஸ்தான்'' கைதடி வடக்கு, கைதடி.

மூன்ரும் பரிசு;- செல்வி நமசிவாயம் பவானி தனங்கிளப்பு, சாவகச்சேரி.

★ குறிப்பு:- பரிசு பெற்றவர்களின் பணம் காசோலை மூலம் அனுப்பி வைக்கப்படும். நேரில் எவரும் வர வேண்டியதில்லை.

# வில்லியத்தின் ஒப்புதல் வாக்குமூலம்; விசாரணையில் புதியதொரு திருப்பம்

வழக்கு விசாரணை ஆரம்பமாயிற்று- கொலைக் குற்றத்தை ஒப்புக்கொண்டு — அரசினால் மன்னிப்பு அளிக்கப்பட்டு - அரசதரப்புச் சாட்சியமாக மாறியிருக்கும் வீட்டு வேலைக்காரன் வில்லியம் ஒப்புதல் வாக்குமூலம் அளித்தான்.

அவனது சாட்சியப்படி கொலை வீட்டின் மேல் மாடியில் நிகழ்ந்தது.

காலையில் 8-30 மணிக்கு ஆயாவும், மூத்த பிள்ளைகள் இருவரும் பாடசாலைக்குச் சென்ற பின்னர் 9 மணியளவில்

## அத்தியாயம் 2

இந்தச் சம்பவம் நடந்தது என்றான் அவன்.

* * *

'திருமதி சதாசிவம் கட்டிலில் அமர்ந்து இருந்தார்.

அப்போது அங்கு வந்த திரு. சதாசிவம் தனது மனைவியின் தலைமயிரை இடது கையால் பிடித்து இழுத்து, வலது கையை அவரது தொண்டையில் வைத்து நசித்துக்கொண்டு அவரைக் கீழே தள்ளினார்.

திருமதி சதாசிவம் முகம் மேலே பார்க்க நிலத்தில் விழுந்தார். அவரது கழுத்தைச் சதாசிவம் தொடர்ந்து நசித்தார். அதனால் திருமதி சதாசிவம் கை, கால்களை அடித்துக் கொண்டு துடித்தார்.

அவ்வேளை என்பக்கம் திரும்பிய எஜமான்—

'டேய் பேயா! காலைப் பிடியடா'— என்று கத்தினார்.

நான் அவரது சட்டைக்குக் கீழ்ப்படிந்தேன். திருமதி சதாசிவத்தின் கால்களை அழுத்திப் பிடித்துக் கொண்டேன்.

உயிர் போகும்வரை கழுத்தை நெரித்த எஜமானர், பின்னர் எழுந்து நின்று தனது ஒரு கால் பாதத்தினால் குரல்வளையை ஓங்கிக் குத்தினார். குரல்வளை நொருங்கிய சத்தம் எனக்குக் கேட்டது.

அதன் பின்னர் எஜமானர் உத்தரவுப்படி சடலத்தைத் தூக்கி

## சதாசிவம் கொலை வழக்கு

னோம். அவர் கைகளின் 'கமக்கட்டு' பகுதியைப் பிடித்துத் தூக்க நான் கால்களைத் தூக்கினேன்.

படிக்கட்டினால் இறங்கி குசினிவழியாகச் சடலத்தைக் கராஜிற்கு எடுத்துச் சென்று அங்கு நிலத்தில் கிடத்தினோம்.

எஜமானர் சடலத்தில் இருந்து காப்பு, மோதிரம், தாலிக்கொடி ஆகியவற்றைக் கழற்றினார். நான் செய்த 'சேவைக்காக' அவற்றையும் மூன்று ரூபா காசையும் சேர்த்து என்னிடம் தந்தார்.

காலை 9-30 மணியளவில் நகைகளைக்கொண்டு போய் நகைக்கடை ஒன்றில் விற்றுக் காசாக்கினேன்.

—இப்படிக் கூறினான் வில்லியம்.

வில்லியமிடமிருந்து காலை 9-30 மணிக்கு நகைகளைத் தாம் வாங்கியதாக நகைக்கடைக் காரர்களும் ஒப்புக் கொண்டனர்.

இது தவிர, வில்லியத்தின் சாட்சியங்களின் பல பகுதிகள் மருத்துவ அறிக்கையுடன் ஒத்து இசைந்ததாகக் காணப்பட்டது.

### எதிர்தரப்பு சாட்சியங்கள்

ஆனால் திரு. சதாசிவம் பக்கத்துச் சாட்சியங்களில் சிலமுரண்பாடுகளைச் சுட்டிக்காட்டத் தவறவில்லை.

அப்போது இளம் சட்டத்தரணியாகப் பிரகாசித்துக் கொண்டிருந்த கொல்வின் ஆர். டி. சில்வா சதாசிவம் தரப்பில் ஆஜராகி சாட்சிகளை நெறிப்படுத்தி தமது பக்கத்தை ஓரளவேனும் ஸ்திரப்படுத்த மிகுந்த பிரயாசை எடுத்துக் கொண்டார்.

சதாசிவம் தரப்பில் டாக்ஸிக் கம்பனி ஒன்றின் மனேஜர் சாட்சியமளித்தார்.

'காலை 10-30 மணிக்கு



சிட்னி சிமித்

டாக்ஸி அனுப்புமாறு கேட்டுத் தொலைபேசி அழைப்பு ஒன்று வந்தது. எனக்குத் தெரிந்த பழக்கமான பெண்ணின் குரலாக அது இருந்தது. நிச்சயமாக அது திருமதி சதாசிவத்தின் குரல் தான்'— இப்படி அடித்துச் சொன்னார் அவர்.

அடுத்து டாக்ஸி சாரதி சாட்சியமளித்தார்.

'ஐந்து நிமிடம் கழித்து நான் சென்றபோது திரு. சதாசிவம் டாக்ஸியில் ஏறினார். அவ்வேளை திருமதி. சதாசிவம் வீட்டுவாசலில் நின்றார். முன்னரே இரண்டொரு தடவை அவரைக் கண்டிருப்பதால் எனக்கு திருமதி. சதாசிவத்தைத் தெரியும்! —இப்படி சாரதியும் கூறினார்.

எதிரி தரப்பில் அடுத்த சாட்சியாக அழைக்கப்பட்டவர் திருமதி. சதாசிவத்தின் சட்ட ஆலோசகராகக் கடமையாற்றியவரின் மகன்.

தனக்கு திருமதி. சதாசிவத்தை நன்றாகத்தெரியும் என்றும்—

அவரது குரல் தனக்கு நன்கு பழக்கப்பட்டது என்றும்—

அன்றையதினம் பகல் 10.25 மணிக்கும் நண்பகல் 12 மணிக்குமிடையில் தான் திருமதி.சதாசிவத்துடன் தொலைபேசி மூலம் கதைத்ததாகவும் அவர் கூறினார்.

—இப்படி இருதரப்பு சாட்சியங்களையும்கேட்டு குழம்பிப் போயிருந்தனர் ஜூரிமார்.

### கொலை நடந்தது எப்போது

காலை 9.30 மணிக்கு முன்னர் கொலைநடந்தது என்கின்றான் வில்லியம். அதற்கு தான் உதவி செய்ததாகவும் அவன் அடித்துக் கூறுகின்றான். அவனது சாட்சியம் பல பகுதிகளில் மருத்துவ அறிக்கை மற்றும் சாட்சியங்களுடன் இயைந்து போகின்றது.

அதை நம்புவதா? அல்லது—

வில்லியத்தின் சாட்சியத்திற்கு முரணாக காலை 10.30 மணிக்குப் பின்னரும் திருமதி.சதாசிவம் உயிருடன் இருந்ததை ஊர்ஜிதப்படுத்துகின்றார்கள் எதிரித்தரப்பு சாட்சிகள்.

அதை நம்புவதா?

இந்த இக்கட்டான நிலையைத்தான் எதிரித்தரப்புச் சட்டத்தரணி கொல்வின் எதிர்பார்த்திருந்தார்.

கொலை நடந்த நேரம் பெரும் சந்தேகத்தைத் கிளப்புகின்றது.

அதனை வைத்துக் கொண்டு எதிரியை விடுவிக்க வழியுண்டா என்பதை அவர் துருவித் துருவி ஆராய்ந்தார்.

கொலை நடந்த நேரத்தைத் தீர்மானிப்பதில் அதிகம் தங்கியிருக்கக்கூடியது மருத்துவ அறிக்கைதான். அதனையும் கொல்வின் ஆராய்ந்தார்.

சட்ட மருத்துவ அதிகாரி டி. சேரத்தின் பிரேத பரிசோதனை அறிக்கை அவருக்குச் சில உற்சாகமூட்டும் சந்தேகங்களைத் தருவதாக இருப்பதைக்கண்டார்.

அதை வைத்துக் கொண்டு தம் பக்கத்தை ஸ்திரப்படுத்த அவர் முயன்றார்.

### சிமித்தின் உதவியை நாடினார்

முதலில்—அவ்வேளையில் உலகப்புகழ்பெற்ற சட்ட மருத்துவ இயல்

## சட்டத்துறையில் மருத்துவ இயல்

(Forensic Medicin ) மேதையாகஇருந்த சேர் சிட்னி சிமித்தின் உதவியையும் ஆலோசனையையும் நாடுவதுஎன அவர் முடிவுசெய்தார்.

இதற்காக திரு.கொல்வின் ஆர்.டி. சில்வா. தமக்குக்கீழ் வேலைசெய்த சட்டத்தரணி திரு நடராஜாவை லண்டனுக்கு திரு. சிட்னி ஸ்மித்திடம் விசேடமாக—அவசரமாக—அனுப்பி வைத்தார்.

வழக்கு சம்பந்தமான ஆவணங்களையும், டி. சேரத்தின் மருத்துவ அறிக்கையையும் சேர். சிட்னி ஸ்மித் ஆராய்ந்தார்.

கொல்வினின் முயற்சியில் தகுந்த பலன் ஏற்படும் என்று சிட்னி ஸ்மித்திற்கு நம்பிக்கை ஏற்பட்டது.

தம்முடைய மருத்துவ அறிவை வைத்துக் கொண்டு கொலைச் சம்பவம் பற்றிய துல்லியமான தகவல்களை காரணவிளக்கங்களோடு வெளியே கொண்டு வரலாம் என சிமித் நம்பினார்.

அவரின் நம்பிக்கை வீண் போகவில்லை.

தமது வேலைகளை ஒதுக்கி வைத்து விட்டு இந்த வழக்கிற்காக இலங்கைக்குப் பறந்து வந்தார் சேர் சிமித்.

நீதிமன்றத்தில் எதிரித் தரப்பு சாட்சிகளுள் ஒருவராக ஆஜராகி உண்மை வெளிப்பட உழைத்தார்.

மருத்துவ உண்மைகளை விளக்கி அவர் நீதிமன்றத்தில் அளித்த சாட்சியங்கள்............

* உண்மையில் கொலை நடந்த நேரம் எது?

* கொலை செய்தவர் யார்?

★ கொலை நடந்த இடம் எது?

- என்றகேள்விகளுக்கு நியாயமான விளக்கத்தையும் விடையையும் தருவதாக அமைந்தன.

அவரது சாட்சியம் சட்ட மருத்துவ இயலில் ஓர் அத்தியாயம் என்றே கூறிவிடலாம்.

அவர் அளித்த பதில்கள் சுவையானவை.

- (வளரும்)

-- தமிழில்: வித்கு --

---

விம்பிள்டன் டென்னிஸ் போட்டி

# எட்டு முறை சம்பியனான வீராங்கனை மாட்டினா நவர்ட்டிலோவா

விம்பிள்டன் டென்னிஸ் போட்டிகள் கடந்த வாரம் முடிவடைந்தன.

ஆண்கள் போட்டியில் ஆவலுடன் எதிர்பார்க்கப்பட்டவர்கள் பொறிஸ் பேக்கர், இவான் லெண்டல், ஜிம்மி காணர்ஸ் ஆகியோர் ஆவர்.

ஆனால் எவரும் எதிர்பாராமல் விம்பிள்டன் காஷை( ASH) வென்றவர் ஆஸ்திரேலியாவின் பற் காஷ். இருபத்திஇரண்டு வயது இளைஞரான இவருக்குக் கிடைத்தபரிசு ஒரு இலட்சத்து ஐம்பத்தி ஐயாயிரம் பவுண்கள். 1971 ஆம் ஆண்டுக்குப் பின் விம்பிள்டன் சாம்பியனான முதலாவது ஆஸ்திரேலியர் இவராவர்.

கடந்த இரண்டு வருடங்களாக சாம்பியனாக வந்த பொறிஸ் பேக்கரினால் இரண்டாவது சுற்று ஆட்டம் வரையுமே நுழைய முடிந்தது. அனுபவஸ்தரான ஜிம்மி காணர்ஸ் அரை இறுதி வரை தாக்குப்பிடித்தார். பல டென்னிஸ் போட்டிகளில் சாம்பியனாகி ஒருமுறையாவது விம்பிள்டன் கோப்பையை வெல்ல வேண்டும் என்ற வீராப்புடன் ஆடிய இவான்லெண்டல் இறுதி ஆட்டத்தில் கோட்டை விட்டார்.

கடந்த ஞாயிறு நடைபெற்ற இறுதியாட்டத்தில் பற்காஷும் இவான் லெண்டலும் மோதினார்கள். முதலாவது போட்டியில் இருவரின் ஆட்டமும் மிகவும் விறுவிறுப்பாகவும் சுவாரசியமாகவும் அமைந்தபோதிலும் பற் காஷ் திறமையாக ஆடி 7 — 6 புள்ளிகள் அடிப்படையில் வெண்டலைத் தோற்கடித்தார்.

இரண்டாவது ஆட்டத்திலும் பற் காஷ் 6 — 2 புள்ளிகள் வித்தியாசத்தில் வென்றார்.

மூன்றாவது ஆட்டத்திலும் வென்று போட்டியை 5 ஆட்டங்களாக மாற்ற இவான் வெண்டல் முயன்ற போதும் முடியாமல் 7 - 5 புள்ளி அடிப்படையில் தோற்றார். பற் காஷ் இறுதியில் சாம்பியனாகத் தெரிவானார்.

பெண்கள் போட்டியில் எல்லோரும் எதிர்பார்த்தபடி எட்டாவது தடவையாக சாம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டவர், 30 வயதான டாலர் பெண்மணி என அழைக்கப்படும் மாட்டினா நவர்ட்டிலோவா.

இறுதிப் போட்டியில் இவரை எதிர்த்து ஆடியவர் ஸ்டெபி கிராம்.



தொடர்ந்து எட்டு முறை வெற்றியீட்டியிருக்கின்றீர்கள். இதற்கு விசேட காரணம் உண்டா? — இப்படி மாட்டினாவிடம் கேட்கப்பட்டது.

அவர் அளித்த பதில் வருமாறு:

நான் களத்தில் ஆட ஆரம்பித்தால் எதிர் கொண்டு ஆடுபவர்களின் பலம், பலவீனம், பற்றி கவலைப்படுவது இல்லை.

எனது திறமையை நம்பியே ஆடுகின்றேன்; வெற்றியீட்டுகின்றேன். சில சமயம் வெற்றி சுலபமாக வரும்; சில சமயம் கடுமையாக உழைத்துத் தான் பெற வேண்டும்.

### கிரிக்கெட்

இங்கிலாந்துக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் கடந்த வாரம் லீட்ஸில் நடைபெற்ற மூன்றாவது டெஸ்ட் போட்டியில் பாக்அணி வெற்றி பெற்றுள்ளது.

இது இம்ரான் கான் தலைமையில் பாகிஸ்தான் அணி கடந்த சில காலமாக பின்பற்றி வரும் நவீன அணுகு முறைக்கு கிடைத்த வெற்றியாகும். மேற்கிந்தியாவுடனான ஆட்டங்களில் தொடங்கி இந்தியாவில் ஸ்திரப்படுத்தி இங்கிலாந்தில் உறுதியாக நிலைநாட்டப்பட்டது தான் இந்த நவீன அணுகு முறை.

இந்தியாவில் முடிவுற்ற அண்மைய டெஸ்ட் தொரிக் இந்தியா அபாரமாக ஆட ஆரம்பித்த சந்தர்ப்பங்களில் எல்லாம்— தன்னால் வெல்வது கடினம் என்ற நிலையில் — பாதுகாப்பாகத் தடுத்து ஆடி ரசிகர்களை போரடிக்கச் செய்து ஆட்டங்களை வெற்றி தோல்வியின்றி முடித்தனர் இம்ரான் தலைமையிலான பாகிஸ்தானியர்.

முதல் ஆட்டங்களில் வெற்றி தோல்வி காண விடாது தடுத்து ஆடியவர்கள், பெங்களூரில் நடைபெற்ற ஐந்தாவது

## விளையாட்டுத் துறை

டெஸ்ட் போட்டியில் இந்தியா நிலைதடுமாறிய போது தாங்கள் அபாரமாகஆடி குறிப்பிட்ட டெஸ்ட் போட்டியிலும் அதன் மூலம் தொடரிலும் இந்தியரை இந்தியாவிலே வென்று நாடு திரும்பினர்.

இங்கிலாந்திற்கு வந்த போதும் இங்கிலாந்து அபாரமாக ஆட ஆரம்பித்த முதல் இரண்டு டெஸ்ட்போட்டிகளிலும் சிரற்ற கால நிலையைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தினர் இம்ரான் குழுவினர்.

லீட்ஸில் நடைபெற்ற மூன்றாவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து தடுமாற ஆரம்பித்தபோது குழுவினரின் கூட்டுத்திறமையால் அவர்களைத் தோற்கடித்து விட்டார்கள்.

முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணியால் பெறமுடிந்த ஓட்டங்கள் 136 மட்டுமே. மூன்றுவீரர்களால் மட்டுமே இரட்டை இலக்க ஓட்டங்களை எட்ட முடிந்தது.

த. ஜெ. கப்பெல் மட்டும் பாகிஸ்தான் பந்து வீச்சை ஓரளவு எதிர் கொண்டு ஆடி ஒரு அரை சதத்தை பூர்த்தி செய்தார். பாகிஸ்தான் சார்பில் இம்ரான் கான், அக்ரம், மொஹ்ஷின் கமால் ஆகியோர் தாலா மூன்று விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்கள்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி நிதானமாகவும், திறமையாகவும் துடுப்பெடுத்தாடி 353 ஓட்டங்களைப் பெற்றது.

பந்து வீச்சாளராக அணிக்குள் புகுந்து கடந்த சில காலமாக எதிரணி பந்து வீச்சாளர்களைத் திணறடித்து வரும் சலீம்மாலிக் தனது சதம் பெறும் வாய்ப்பை ஒரு ஓட்டத்தினால் தவறவிட்டார்.

அவருக்கு ஒத்தாசையாக பாகிஸ்தான் அணியின் வெற்றிக்கு அத்திவாரம் இட இஜாஸ் அகமெட் 50 ஓட்டங்களையும், வாசிம் அக்ரம் 43 ஓட்டங்களையும் பெற்றனர்.

மற்றைய பந்து வீச்சாளர்களின் பக்கபலம் கிடைக்காத நிலையில் தனி ஒருவராக நின்று தம் திறமையில் நெயில் பொஸ்டர் எட்டு விக்கெட்டுகளைச்சாய்த்தார்.

தோல்வி நிச்சயம் ஆனால் அது எத்தகைய தோல்வி என்பதை முடிவு செய்யும் வகையில் இரண்டாவது இனிங்ஸில் ஆட ஆரம்பித்த இங்கிலாந்தினால் பெற முடிந்த ஓட்டங்கள் 199 மட்டுமே.

பாகிஸ்தான் முதல்வர் இம்ரானின் அபார வீச்சுக்கு சற்று ஈடுகொடுத்து ஓரளவு சமாளித்தும் ஆட முனைந்தவர் இங்கிலாந்தின் முன்னால் அணித்தலைவர் டேவிட் கவர் மட்டுமே. அவர் பெற்ற ஓட்டங்கள் 55.

இம்ரான் கான் 40 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுகளைச் சரித்தார்.

இந்தப் போட்டியில் இம்ரான் தனது 300வது டெஸ்ட் விக்கெட்டைப் பெற்றுள்ளார். 300 விக்கெட்டை எட்டிய முதலாவது பாகிஸ்தான் பந்து வீச்சாளர் என்ற பெருமையைப் பெறும் இவர் இந்த சாதனையைச்செய்த எட்டாவது டெஸ்ட் ஆட்டக்காரர் ஆவார்.

★

-- ஈசன் --

---

# ரஷ்யாவில் மின்னிய இந்திய முத்துக்கள் 3

## கீதை, பாரதிபாடல், சிவஸ்துதி

சினத்தால் மனக் குழப்பம்; மனக்குழப்பத்தால் நினைவு நாசம்; நினைவு நாசத்தால் புத்தி நாசம்;புத்தி நாசத்தால் ஆள் அழிகின்றான்.

- இது கீதோபதேசம். இதனை ரஷ்யத் தலைவர் கோர்ப்பச்சேவ் அண்மையில் பாரதத் திருவிழா நிகழ்ச்சிகளில் பின்வருமாறு ஆங்கிலத்தில் எடுத்துச் சொன்னார்.



கோர்ப்பச்சேவ்

"Wrath bears Confusion; Confusion bears memory Eclipse memory Eclipse kills knowledge, and the death of knowledge kills man himself.

இன்று ஆயுதபரிகரணத்தடை பற்றிக் குரல் கொடுக்கும் கோர்ப்பச்சேவ் இதனை மேற்கோள் காட்டியமை வியப்பில்லை. இவ்வாறு மகாபாரதத்தை ரஷ்யத்தலைவர் தொட்டுப் பேச,

ராஜீவ் காந்தி தனது பேச்சிலே தமிழ்நாடு தந்த மகாகவி பாரதியார் பாடலொன்றின் ஆங்கில மொழிபெயர்ப்பைக் கூறத்தவறவில்லை.

ரஷ்யப்புரட்சிநிகழ்ந்தவுடனே துள்ளிக்குதித்து அக்கவிஞன் பாடிய பாடல் இதோ:-

மாகாளி பராசத்தி உருசியநாட்
டினிற் கடைக்கண் வைத்தாள், அங்கே
ஆகாவென் றெழுந்ததுவார் யுகப்புரட்சி,

பாரதத் திருவிழா இசைக்குயில் எம். எஸ் சுப்புலக்ஷ்மிபாடிய சிவஸ்துதியுடன் ஆரம்பமானது.

இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட இந்தியக் கலைஞர்கள் ரஷ்யர்களின் கண்களுக்கும் செவிகளுக்கும் நூற்றுக்கும் மேற்பட்ட நகர்களில் விருந்து படைக்கிறார்கள்.



சுப்புலட்சுமி

அங்கு நட்ட மரமொன்றுக்கு வொட்கா, கங்கை நீரினை இரு தலைவர்களும் பாய்ச்சினார்கள்.

ராஜீவை அவர்கள் ரஷ்ய மரபுக்கேற்ப வரவேற்க, நம்மவர்கள் கோர்பச்சேவை இந்திய மரபில் பூரண கும்பம் வைத்து வரவேற்க, அவர் இரு கைகூப்பி வரவேற்பை ஏற்றுக் கொண்டார்.

ரஷ்ய-இந்திய உறவும் உடன்பாடும், வெறுமனே இரு அரசுகளுக்கும் இரு நாட்டுத் தலைவர்களுக்கும் இடையே ஏற்பட்டுள்ளது அல்ல.

அதற்கு மேலாக ரஷ்ய மக்கள் மத்தியில் தலைநகரில் மட்டுமன்றி பல மாநிலங்களிலும் ரஷ்ய-பாரத உணர்வாக மலர்ந்துள்ளதைக் காணக் கூடியதாக உள்ளது.

இதனாலே ரஷ்ய-பாரத உறவினை மிகவும் தோழமை உணர்வுடையது, இறுக்கமானது எனலாம்.

*

- வி.வி.எஸ். -

---

# யூரியா பதனிட்ட....

(6 ம்பக்கத் தொடர்ச்சி)

தேவையான வைக் கோலைஎடுத்துக்கொண்டு மீதியை மூடிவிடவேண்டும்.எடுக்கப்பட்ட வைக்கோலை உணவாகக் கொடுக்க முன் சிறிது காற்றில் உலர விடவேண்டும். இதனால் அமோனியா மணம் நீங்கி விடும்.

யூரியா பரிகரிப்பின் மூலம் கால் நடைகளுக்கு 1. சமிபாட்டுத்தன்மை அதிகரிக்கிறது. 2. புரதச் சத்துக் கூடுகிறது. 3. உள்ளெடுக்கும் வைக்கோலின் அளவு அதிகரிக்கிறது.

### வைக்கோல் உணவு நஞ்சடைதல்

சரியான முறையில் பதனிடப்படாத நிலையில் வழங்கப்படும் வைக்கோல் உணவு மாடுகளுக்கு நஞ்சாகும். இவற்றை உண்ணும் கால்நடைகளுக்கு நோய்கள் ஏற்படும். வாயினால் வீணீர்வடியும், வயிறு வீங்கும், இரை மீட்க மாட்டாத தன்மைகள் ஏற்படும். இவ்வாறான காலங்களில் யூரியா கலந்த வைக்கோல் கொடுப்பதை நிறுத்தி விடவேண்டும்.4அவுன்ஸ் வினாகிரியை 4 அவுன்ஸ் நீரில் கரைத்து பருக்க வேண்டும். நான்கு மணி நேரத்தின் பின்னரும் நோய்காணப்படின் மீண்டும் அதேயளவு கலந்து பருக்கவேண்டும். ★

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

''அம்மா. அம்மா,''
என்ன பிள்ளை!
''எங்கள் ஆசிரியை இன்று என்னுடைய உடைத்தூய்மையைப் பாராட்டினுர் நல்ல வெள்ளை'' என்ருர்.
தூய்மைக்கும் வெண்மைக்கும் காரணம்
"மில்க்வைற் சலவைப் பவுடர்"
என்று சொன்னேன்.
மில்க்வைற் - யாழ்ப்பாணம்.

# சஞ்சீவி

11 - 07 - 1987 சனிக்கிழமை

சிக்கனத்தில் சிக்கனம்
மில்க்வைற் மேலுறைகள் பெறுமதியானவை: காசுத்தாள் போல் அவை பண்டம் வாங்கப் பயன்படும். தொப்பி, கோப்பி, துவாய், பெட்சிற், ஸ்ரிக்கர், தமிழ் நூல்கள், மில்க்வைற் செய்தி போன்றவற்றை வாங்குவதற்கு ''மில்க்வைற் மேலுறைகள்'' பெறுமதி வாய்ந்தவை.
மில்க்வைற் - யாழ்ப்பாணம்.

## பசுவும் - - -

(1ஆம்பக்கத்தொடர்ச்சி)

தாரத்தைப் பெருக்க வல்ல இலகு வழிமுறைகளும், வளத்தைப் பயன்படுத்த வல்ல புதிய நுட்பங்களும் இன்னும் எத்தனை, எத்தனையோ இருக்கலாம்! அவற்றை இனங்காணுதலே பிரதானம்.

எமது மண், அதன் மூலவளங்கள் ஆகியன குறித்து ஆய்வும், ஆய்வில் கண்டறிவதைச் செயற்படுத்தலும் அவசியம். எமது பிரதேசத்தில் உள்ள விற்பன்னர்களின் முயற்சி இதற்குத் தேவை!

நாளை 12 . 07 . 1987
குதூகல
★ திறப்புவிழா ★
வவுனியா பஜாரில் பனை அபிவிருத்திச் சபையின் "கற்பகம்" விற்பனை நிலையம் நாளைக் காலை 10 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.
"ஆடிப்பிறப்பை முன்னிட்டுத் தரமான பனைவெல்லம் விற்பனைக்குண்டு"
★ எமது உள்நாட்டு உற்பத்திகளைப் பாதுகாப்போம்
தலைவர்
பனை அபிவிருத்திச் சபை

# இந்திய அரசு எதிர்பார்க்கும் புதிய யோசனை என்னவோ?

புதிய சிந்தனை, புதிய முயற்சி, புதிய யோசனைகள்—

ஸ்ரீலங்கா அரசிடம் இருந்து இவற்றை இந்தியா எதிர்பார்க்கின்றது.

எந்த அடிப்படையில் புதிய முயற்சிகளை எடுப்பது, புதிய யோசனைகளைச் சமர்ப்பிப்பது— இதைத் தீர்மானிக்க முடியாமல் கொழும்பு அரசு வட்டாரங்கள் திணறுகின்றன.

இந்தியாவின் எண்ணத்தை 'அம்மா' புரிந்து கொண்டுவிட்டார்.

அண்மையில் பத்திரிகையாளருக்கு அளித்த பேட்டியில் சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா அதைத் தெளிவாகக் கூறியிருந்தார்.

இந்தியாவுக்கு எரிச்சலூட்டும் வெளியுறவுக் கொள்கையை நான் ஆட்சிக்கு வந்தவுடன் அகற்றிவிடுவேன்—இப்படி திருமதி. பண்டாரநாயக்கா தெரிவித்தார்.

இன்று இந்தியாவுக்குள்ள தலையாய பிரச்சினை, தமிழர் பிரச்சினையிலும் பார்க்க தனக்கு எதிரான வெளிநாட்டுச் சக்திகள் ஸ்ரீலங்காவில் 'குடிபுகுந்துள்ளன' என்பதுதான். 'குடிபுகுந்துள்ள' சக்திகள் வெளியேறும்போதுதான் இந்தியாவின் பாதுகாப்பு சம்பந்தப்பட்ட அச்சுறுத்தல் நீக்கப்படும்.

இது இந்திய தரப்பின் வாதம்.

கொழும்பில் இன்று உள்ள அரசு, இந்தியாவுக்கு எதிரான சக்திகளை 'வரவேற்று குடிபுக' வைத்துள்ளது.

இந்த நிலையில் எப்

## தீர்வுக்கான சாத்திய சூழ்நிலை

### உருவாக வெளிச்சக்திகள் வெளியேறவேண்டும்

போது தமிழர் பிரச்சினைக்கு பேச்சுக்கள் மூலம் தீர்வு காணுவது?

வெளிச்சக்திகள் நாட்டில் 'குடியிருக்கும்வரை' தமிழர் பிரச்சினைப் பேச்சுக்கள் இழுபறியில் இருக்கும்—

இது சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோவின் வாதம்.

இந்தியாவுக்கு எதிரான சக்திகளை நாட்டில் இருந்து வெளியேற்றிவிட்டால், தமிழர் பிரச்சினைக்கு நியாயமான தீர்வு ஒன்றைக் காண முடியும்.

இந்த நோக்கில்தான் திருமதி சிறிமாவோ இந்தியாவின் நிலைப்பாட்டைக் கணித்து வைத்து இருக்கின்ருர்.

**அரசின் பாதை**

ஆனல் தர்மிஷ்டரின் அரசு எந்தப் பாதையில் செல்கின்றது?

இதை ஆராய்ந்தால் இன்னெரு உண்மை புலனுகும்.

தமிழர் பிரச்சினையைப் பயன்படுத்தி இந்தியா தனது பிராந்திய தலைமைத்துவத்தைப் பலப்படுத்தப்பார்க்கின்றது – என்று கொழும்பு அரசு வட்டாரங்கள் கருதுகின்றன.

தமிழர் பிரச்சினையை வைத்து இந்தியா தனது ஆதிக்கத்தை இந்துசமுத்திரப் பிராந்தியத்தில் நிலைகொள்ளாமல் செய்வதற்கு இந்தியாவுக்கு எதிரான சக்திகள்கொழும்பு அரசைப் பயன்படுத்துகின்றன.

இது இன்னெரு தரப்பினரின் வாதம்.

**கிரெனடா, ஆப்கன் வரிசையில்**

கிரெனடா பிரச்சினையில் அமெரிக்கா தீர்வு கண்டது போன்று–

ஆப்கன் பிரச்சினைக்கு சோவியத்யூனியன் தீர்வு கண்டது போன்று–

இந்தியா ஸ்ரீலங்காப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்போகின்றது– என்றும் பகிரங்கமாகப் பலரும்பேசத்தலைப்பட்டு விட்டார்கள்.

கிரெனடா, ஆப்கன் மாதிரியான 'தீர்வுகளில்' இருந்து தப்பத்தான், "இந்தியாவுக்கு எரிச்சலூட்டும்சக்திகளை நாட்டில் இருந்துவெளியேற்றி விடுவேன்"- என்று சிறிமாவோகூறிவருகின்ருர்.

தர்மிஷ்டருக்கும் இது புரியாமலா போகும்!

**உள்ளும் புறமும்** (குறுமுனி)

அணி சேர்ந்து விட்டால் புரிந்தும் புரியாத மாதிரி நடந்து கொள்ளவேண்டியது தான்.

**புதிய யோசனை எப்படி அமையும்?**

தமிழர் பிரச்சினைக்குத் தீர்வுகாண, தமிழர் அபிலாஷைகளை நிறைவேற்றக்கூடிய புதிய யோசனைகளைச் சமர்ப்பிக்கும்படி கொழும்பை புதுடில்லி அரசு கோரியுள்ளது.

வடமராட்சித் தாக்குதலால் நொந்து போய் உள்ள தமிழ் உள்ளங்களைச் சாந்தப்படுத்தக் கூடியதாக அந்த யோசனைகள் அமைய வேண்டும். இப்படி வெளியுறவு அமைச்சர் நாராயண் தத் திவாரி வேறு தெளிவாகக் கூறி விட்டார்.

'மிக நல்ல அடிப்படை' என்று இந்தியா கருதிய டிசம்பர் 19 யோசனைகளையே இந்திய அரசு இன்னும் தமிழர் அமைப்புக்களிடம் உத்தியோகபூர்வமாகச் சமர்ப்பிக்கவில்லை என்று ஒரு செய்தி கூறுகின்றது.

இந்த நிலையில் இந்தியா எதிர்பார்க்கும் புதிய முயற்சிகள் தமிழர் பிரச்சினைக்கு மட்டுமானதாக அமைந்தால் போதாது.

இந்திய அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக் கூடியதாகவும் அம் முயற்சிகள் இருக்க வேண்டும்–

இப்படி புதுடில்லி வட்டாரங்கள் எதிர்பார்க்கின்றன.

டிசம்பர் 19 யோசனையானது, தமிழரின் பிரதேசத்தை வரையறுப்பதும், ஏதாவது ஒரு வகையான வடக்கு, கிழக்கு இணைப்புக்கு வழி வகுப்பதாகவும் இருந்தது என்று கூறப்பட்டது.

டிசம்பர் 19 யோசனையிலும் பார்க்க முன்னேற்றமான யோசனையை இந்தியா இப்போது கொழும்பு அரசிடம் கோரியுள்ளது.

'நொந்துபோன தமிழ் உள்ளங்களைச் சாந்தப்படுத்தும்' யோசனையாகவும் அவை இருக்கவேண்டும் என்றும் கொழும்புக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

**தாயகம்**

வடக்கு, கிழக்கு மாகாணங்களை முற்ருக இணைத்து தமிழர் தாயகமாக தருவது ஒன்றுதான் 'நொந்துபோன உள்ளங்களை'ச் சாந்தப்படுத்தும் யோசனையாக இருக்கும் என்பதில் சந்தேகமே இல்லை.

கொழும்பு அரசின் புதிய முயற்சி, புதிய யோசனை இந்த அடிப்படையில் அமையுமா?

அப்படி அமைந்தால் மட்டுமே நாட்டில்-புதிய வானம், புதிய பூமி – எங்கும் பூமழை பொழிகின்றது – என்ற நிலை ஏற்படும் என்று அரசியல் அவதானிகள் கருதுகின்றனர். ★

## நிவாரணக் கப்பல் விவகாரம்

உணவுக் கப்பலா? உளவுக் கப்பலா?

கொழும்பு அரசு வட்டாரங்களில் பரவலாக அடிபடும் கேள்விகள் இவை.

ஆனை வரும் பின்னே மணி ஓசை வரும் முன்னே!

ஆளேக்கட்சியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்திலும் இப்படி பிரஸ்தாபிக்கப் பட்டது.

வரப்போகும் இந்திய இராணுவத்துக்குத் தேவையான உணவா கப்பல்களில் காங்கேசன்துறைக்குக் கொண்டு வரப்படுகின்றது?

இச்சந்தேகம்தான் "கப்பல் ஒரு தொடர் கதை"யாய் வலுத்து வருவதாக பிரதி உயர் கல்வி அமைச்சர் அத்தநாயக்கா அக்கூட்டத்தில் வெளியிட்டார்.

கப்பல்கள் வருவதை நிறுத்த வேண்டிய காலம் வந்துவிட்டது என்று பிரதமர் பேசினுர்.

விமானத்தில் உணவுப் பொதிகள் அனுப்பியதன் மூலம் இந்தியப் பிரதமர் வழங்கிய செய்தியில் அச்சுறுத்தல் இருந்தது.

அந்தப் பின்னணியில் கப்பல்கள் வருவதை நாம் கவனித்துச் செயல்படவேண்டும்—இப்படி பிரதமர் மேலும் தெரிவித்தார்.

இப்படி எல்லாம் பேசப்பட்ட கூட்டத்துக்குத் தலைமை வகித்தவர் தர்மிஷ்டர்.

இன்னும் நான்கு கப்பல்களில் உணவுப் பொருள்களை காங்கேசன்துறையில் கொண்டு வந்து இறக்க கொழும்பு அரசு ஒப்புதல் அளித்து விட்டது.

அதன் பின்னர் ஏன் கப்பல்கள் வருவதை நிறுத்த வேண்டியகாலம் வந்துவிட்டது என்று பிரதமர் பேசவேண்டும்? நான்கு கப்பல்கள் வந்த பிறகும் புதிதாக வேறு உணவுக் கப்பல்கள் வந்து விடுமோ என்ற அச்சம் காரணமாக பிரதமர் இப்படிப் பேசினுரோ?

அல்லது ஒப்புதல் அளிக்கப்பட்ட கப்பல்கள் வருகையை குழப்பி அடிக்க வேண்டும் என்று இப்படிப் பேசினுரோ?

அரசியல் வட்டாரங்களில் இந்த விதமான கேள்விகள்தான் எழும்பியுள்ளன.

இதனிடையில் இன்னெரு அபிப்பிராயமும் கொழும்பு வட்டாரங்களில் அடிபடுகின்றன.

கொழும்பு அரசிடம் இருந்து கிடைக்கும் புதிய யோசனையின் தன்மையைப் பொறுத்துத்தான் உணவுக் கப்பல்களைகாங்கேசன்துறைக்கு அனுப்புவதை இந்தியா நிறுத்தும் - இதுதான் அந்த அபிப்பிராயம்.

எப்படி இருந்தாலும் ஒப்புதல் வழங்கப்பட்ட நான்கு இந்திய உணவுக் கப்பல்கள் காங்கேசன் துறைவந்துபோகும்வரை பிரதமர் நாட்டில்இருக்க மாட்டார்.

அதுதான் நேற்றுக் காலையே விமானத்தில் ஏறி பிரிட்டன் சென்ற பிரதமர், இரண்டுவார காலம் கழித்துத்தான் நாடு திரும்புவார்.

பிரிட்டன், ஜப்பான் போய் திரும்புவதற்கு முன்னர், நான்கு கப்பல்களும் காங்கேசன்துறை துறைமுகத்தில் பொருள்களை இறக்கிவிட்டுப் போய்விடுமே! ★

★ குவைத் ★
பிரயாண ஒழுங்குகள்
LABOURERS உடன் தேவை
★ சம்பளம்: 40 K.D
★ இலவச தங்குமிடம்
★ இலவச உணவு வசதி
★ 4 வருட ஒப்பந்தம்
★ 2 வருட முதிர்வின் பின் LEAVE வசதி
★ திரும்பிச் செல்லும் பிரயாணச் சீட்டு வசதி
★ இம்மாத இறுதியில் பிரயாணம்
முக்கிய குறிப்பு:
15 ஆம் திகதிக்கு நேர்முகப் பரீட்சைக்கு அழைத்துச் செல்ல இருப்பதால் உடன் வரவும்.
முன்பு விண்ணப்பம் செய்தவர்கள் PASS PORTS கொடுத்தவர்கள் தலைமை அலுவலக FREE SELECTION இன்னமும் செய்யாத எல்லோரும் உடன் தொடர்பு கொள்ளவும்.
மிகவும் முக்கியம்:
இன்றிலிருந்து யாபேரும் நேரடியாக எம்மிடம் தொடர்புகொள்ளவும். வேறு பிரதிநிதிகள் ஊடாக வரும் விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.
தலைமைச் செயலகம்:
Construction & Development Company Ltd.
37, S. DE.S. JEYASINGHE MAWATHA
NUGEGODA.
Labour Licence No. 96
தொடர்பு:
V. P Balasubramaniam
(V. P. BALA)
C/o N. V. PONNUTHURAI
School Lane,
KONDAVIL.

## காரைநகருக்---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கைப்பற்றுவதற்கு எடுக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படும் அரச படையினரின் திட்டத்தின் முதல் நடவடிக்கையாகவே காரைநகரில் படையினர் முன்னேறுவதற்கு முயன்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

படையினரின் ஷெல் தாக்குதலினுல் காரைநகரில் பல வீடுகளும் கடைகளும் சேதமடைந்துள்ளன.

நேற்றைய மோதலில் போராளி ஒருவர் காயமடைந்தார். இராணுவத்தரப்பில் ஏற்பட்ட சேதங்களை ஊர்ஜிதப் படுத்தும் தகவல் ஏதும் கிடைக்கவில்லை.

(உ-73 10)

## படகு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கேள்வியுற்ற இவரது உறவினர்கள் சடலம் தீவுப்பகுதி கடலிலே வந்தடையும் என்ற நம்பிக்கையில் தீவுப்பகுதியில் ஏற்கனவே காத்திருந்தனர்.

அவர்களே சடலத்தைப் பொறுப்பேற்று மண்கும்பான்பள்ளிவாசலில் சமயாசாரப்படி நல்லடக்கம் செய்தனர்.

(உ-167)

## ஆலயங்களுக்கும் பூரி விஜயம் செய்தார்

யாழ்ப்பாணம், ஜூலை 11

யாழ்ப்பாணம் வந்திருக்கும் திரு. எச். எஸ். பூரி நேற்று இந்து ஆலயங்களுக்கும், அகதி முகாம்களுக்கும் விஜயம் செய்தார்.

புத்தூர் சிவன்கோயில், நல்லூர் கந்தசுவாமி கோயில், வீரமாகாளி அம்மன் கோயில், நல்லை ஆதீனம், ஆயர் இல்லம் ஆகியவற்றிற்கும் —

புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி, ஆவரங்கால் மகாவித்தியாலயம் ஆகிய இடங்களில் உள்ள அகதி முகாம்களையும் அவர் பார்வையிட்டார்.

அகதி முகாம்களுக்கு பூரி சென்ற பொழுது அங்கிருந்தோர் கண்ணீர் மல்கி கதறி அழுது தமக்கு ஏற்பட்ட அவலங்களை எடுத்துரைத்தனர். (உ-10)

## வவுனியாவில் கற்பகம்

யாழ்ப்பாணம், ஜூலை 11

கற்பகம் விற்பனை நிலையமொன்று நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு வவுனியா பஜாரில் வவுனியா அரச அதிபர் கே. வி. லோகேஸ்வரனினுல் திறந்து வைக்கப்படும்.

கண்டி, திருகோணமலை, மலையகப் பகுதிகளுக்கு பனம்பொருள் உற்பத்திகளை விற்பனை செய்யும் நிலையமாகவும், சந்தைப்படுத்தும் மையமாகவும் இது அமையும் [illegible] தலைவர் திரு. கே. நடராசா தெரிவித்தார். (உ)

## அடிக்கடி தரையிறங்கிய விமானங்கள்

பலாலி, ஜூலை 11

பலாலி இராணுவ முகாமுக்கு புதன், வியாழக்கிழமைகளில் அதிக எண்ணிக்கையான விமானங்கள் வந்து சென்றன.

வடமராட்சித் தாக்குதலின் முன்பும் இவ்வாறு 15 நிமிடத்துக்கு ஒரு விமானமாக வந்து சென்றதனுல் இதுவும் ஒரு பெரிய தாக்குதலுக்கான [illegible] இருக்கலாம் — என மக்கள் அச்சமடைந்துள்ளனர். (உ-119)

## ஆஸித் தேர்தல் இன்று

ஆஸ்திரேலியாவின் நாடாளுமன்றப் பொதுத்தேர்தல் இன்று சனிக்கிழமை நடைபெறுகின்றது.

பதவிக் காலம் முடிவடைய இன்னும் ஓர் ஆண்டு இருக்கக்கூடியதாக பிரதமர் ஹோக் நாடாளுமன்றத்தைக் கலைத்து தேர்தலை நடத்துகின்ருர். (உ-எ)

## உடல் நிலை தொடர்ந்துமோசம்

எல்லைக்காந்தி கான் அப்துல் கபார்கானின் உடல்நிலை தொடர்ந்து ஆபத்தான நிலையில் இருப்பதாக அறிவிக்கப்பட்டது.

கடந்த சனிக்கிழமை பக்கவாதத்தினுல் பாதிக்கப்பட்டதைத் தொடர்ந்து மயக்க நிலையிலேயே எல்லைக்காந்தி இருந்து வருகின்ருர். (உ-எ)

## மனைவியை - -

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

தெரியவருகிறது.

பொதுமக்கள் சேர்ந்து கிராமத்தைச் சுற்றி வளைத்து 28 வயதான சந்தேக நபரைப் பிடித்தனர்.

பின்னர் கிராம வாசிகள், அவரை போராளிகளிடம் ஒப்படைத்தனர். (உ-73)

## சக்திமிக்க------

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கூடியதாகவும் அவை இருக்கும்.

பிரேஸில் தயாரிப்பான 'குஸானே' விமானங்களை வாங்குவது பற்றியே விமானப்படை வட்டாரங்கள் பரிசிலனை செய்துவருகின்றன.

'ஷோர்ட் பிரதர்ஸ்' என்ற மேற்கு நாட்டு விமானத் தயாரிப்பு நிறுவனமே 'குஸானே' ரக விமானங்களை பிரிட்டிஷ் விமானப்படைக்கு விநியோகித்து வருகின்றது.

இந்த நவீன ரக விமானம் எத்தகைய இராணுவ நடவடிக்கைக்கும் பயன்படுத்தக் கூடியது என்று நம்பப்படுகின்றது.

தற்போது ஸ்ரீலங்கா விமானப் படையிடம் ஆறு சியா-மார்செட்டி விமானங்கள், வை-12 ரக சீன ஹெலிக்கொப்டர்கள், போக்குவரத்துக்கு பயன்படுத்தப் படும் அவ்ரோ விமானங்களும் வேறு சில ரக விமானங்களும் உண்டு.

இப்படி 'த ஐலண்ட்' செய்தி மேலும் தெரிவித்தது. (உ-எ)

## நீத்தார் பட்டியல்

### கனகசபை இராமச்சந்திரன்

நயினுதீவைப் பிறப்பிடமாகக் கொண்ட கனகசபை இராமச்சந்திரன் (நடேசன்) காலமானுர். இவர் பெரியநாயகியின் அன்புக் கணவரும், தயாளனின் அன்புத் தந்தையும், சரவணமுத்துவின் மைத்துனரும், தங்கம்மாவின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னரின் ஈமக் கிரியைகள் நாளை 12-07-1987(ஞாயிறு) காலை10 மணியளவில், 11/7, கச்சேரி கிழக்கு ஒழுங்கையில் உள்ள அன்னரின் இல்லத்தில் இருந்து துண்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் உற்ருர், உறவினர் இதை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குமரப்பெருமாள்

(1275)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேற்) லிமிடெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியீட்ட திகதி: 11-07-1987.

Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd at 292/2 Navalar Road, Jaffna on Saturday July 11, 1987

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org